விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii
சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 07 செவ்வாய்க்கிழமை (21.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 33

### மிருசுவில் படுகொலையாளியான இராணுவ அதிகாரி விடுதலை

# படுகொலையான உறவுகளின்

# பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் எட்டு பொதுமக்களின் படு கொலைக்கு காரணமான இராணுவ அதிகாரியை விடுதலை செய்தமையால் எமது உறவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு படுகொலையானவர் களின் உறவுகள் நேற்றையதினம் யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ள னர். (23ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக வரப்பிரசாதங்களை ரணில் கோரியது உண்மையே

### பிரதமர் மகிந்த

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனக்கு மேலதிக வசதிகளை செய்துதரும்படி கோரியது உண்மையே என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுட னான சந்திப்பில் பேசிய 23

## தாய், மகள், மருமகன்
## கடன் தொல்லை காரணமாக உயிர் மாய்க்க முயற்சி

### தாயார் உயிரிழப்பு ; ஏனைய இருவரும் அவசர சிகிச்சை பிரிவில்

(யாழ்ப்பாணம்)

கடன் தொல்லை காரணமாக ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், மகள், மருமகன் ஆகியோர் உயிரை மாய்க்க முற்பட்டதில் தாயார் உயிரிழந்துள்ளதுடன் ஏனைய இருவர் அவசர சிகிச் சைப் பிரிவில் அனுமதிக் 23

## இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை
### நீதி அமைச்சர் நிர்மலா 03

## திருட்டு குற்றச்சாட்டில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மகன் எங்கே?

### தாயார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

திருட்டுக் குற்றச்சாட்டில் பொது மக்களினால் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்ட தனது மகனை காணவில்லை என தாய் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழு வின் யாழ்ப்பாண பிராந்திய அலு வலகத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் சாவ கச்சேரி பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருட்டில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டி 26 வயதுடைய இளைஞன் ஒருவர் பொதுமக்களினால் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டார். 23

## மேல் மாகாணத்தில் சுற்றி வளைப்பு
### 755 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்துக்குள் முன் னெடுக்கப்பட்ட ஒரு நாள் சுற்றி வளைப்பில் பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் 755 பேர் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். 23

## வளவில் ஆடுகட்ட சென்ற குடும்பப் பெண் சடலமாக மீட்பு
### புத்தூர் வாதரவத்தையில் சம்பவம்

(புத்தூர்)

ஆடு கட்டுவதற்காக வீட்டு வளவிற்கு சென்ற குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன் தினம் 3.00 மணியளவில் புத்தூர் வாதர வத்தையில் இடம்பெற்றுள்ளது. 23

## மோ.சைக்கிள் விபத்து
### 22 வயது இளைஞன் மரணம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாய மடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பல னின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த இரவீந்திரன் தனுஜன் (வயது- 22) என்ப வராவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி மாலுசந்தி பத்தனைப் பகுதியில் இவரின் மோட்டார் சைக்கிள் வேகக்கட் 23

### மேன் முறையீட்டு நீதிமன்றத்தின்
## பதில் கடமை தலைவராக நீதியரசர் நவாஸ் நியமனம்

23

## முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமருக்கு ஆட்சேபனை தெரிவிக்க கால அவகாசம்

(கொழும்பு)

புலனாய்வு தகவல்கள் கிடைக்க பெற்றிருந்த போதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்து நிறுத் தாததன் ஊடாக மக்களின் அடிப் படை உரிமை மீறப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோருக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் ஆட்சே பனை தெரிவிக்க உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

குறித்த மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனெக அலுவிகார, சிசிரத ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன. 23

# பஸ், கனரக வாகன சாரதிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

பஸ் உட்பட அனைத்து கனரக வாகனங்கள் வீதியின் இடது நிரலில் மாத்திரம் செல்ல வேண்டும்.

கொழும்பு வாகன போக்குவரத்துப் பிரிவு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த நடைமுறையை முன்னெடுத்துள்ளது என்று நகர வாகன மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் கமல் புஷ்ப குமார தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தை மீறிய 500 சாரதிகளுக்கு இக் காலப்பகுதிக்குள் இது தொடர்பாக எச் சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு நகரில் வாகன நெரிசலுக்கு கனரக வாகன சாரதிகள் இடதுபக்க நிரலைப் பயன்படுத்தாமையே இதற்கான காரணமாகும். இந்த விதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நகரத்தை அலங்கரிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் நகர வாகன மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் கமல் புஷ்பகுமார தெரிவித்தார்.

இதேவேளை பஸ்களில் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பாடல்கள் இடம்பெறாதுவிட்டால் அது தொடர்பாக 119 என்ற தொலைபேசி மூலம் அறிவிக்க முடியும். (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



யாழ்ப்பாணம் நல்லூர்
பாணன்குளம்
நாச்சி அம்பாள் ஆலயம்
புனராவர்த்தன அஷ்ட பந்தன
நவகுண்ட பஷ பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேகம், நூதன தரி தள ராஜகோபுரம்
பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக
பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம்
கர்மாரம்பம்
25.01.2020 சனிக்கிழமை காலை 5.25 மணி
எண்ணெய்க்காப்பு
28.01.2020 செவ்வாய் காலை 10.00 மணி முதல்
29.01.2020 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கும்பாபிஷேகம்
30.01.2020 வியாழக்கிழமை
காலை 9.24 தொடக்கம் 9.54 வரை
(C-9016)


## பாராட்டி வாழ்த்துகின்றோம

20.01.2020 திங்கட்கிழமை நாவலப்பிட்டி ஜயதிலக மைதானத்தில் நடைபெற்ற செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் தேசிய மட்டத்தில் கலந்துகொண்ட கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் தரம் 5 கலவன் அணியினர் வெள்ளிப் பதக்கத்தையும் 18.01.2020 நடைபெற்ற தரம் 3 கலவன் அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்

எமது பாடசாலை வரலாற்றில் மட்டுமல்லாமல் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப்பதக்கம் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளார்கள்.

வெற்றிமீட்டிய மாணவர்களைப் பாராட்டுவதோடு இவ்வெற்றிக்காக அயராது உழைத்த பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை பாடசாலைச் சமூகமும் பெற்றோர்களும்

## மரண அறிவித்தல்



தோற்றம்
26 . 04 . 1953

மறைவு
20 . 01 . 2020

### சிவசுப்பிரமணிய ஐயர் மாதவராசா ஐயர்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பத்திரகாளிகோயில் ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணிய ஐயர் மாதவராசா ஐயர் (சின்னவி ஐயர்) அவர்கள் நேற்று (20.01.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சிவசுப்பிரமணிய ஐயர் - நவமணி அம்மா தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், மாதவராசா லிங்கேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவசோதிதுரை இலட்சுமியம்மா, சிவசுப்பிரமணிய ஐயர் சரஸ்வதி அம்மா,காலஞ்சென்ற சிவசுப்பிரமணிய ஐயர் மகாதேவஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசோதிதுரை, கருணானந்ததேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பத்திரகாளிகோவில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(C-9018)

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு
18 - 10 - 1944

இறப்பு
20 - 01 - 2020

### கோவிந்தசாமி பஞ்சாட்சரம்

அல்வாய் வடக்கு தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் சிறீரங்கம், நக்கீரன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி பஞ்சாட்சரம் (பெயின்ரர் மணியம்) அவர்கள் நேற்று (20.01.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கோவிந்தசாமி - சின்னத்தங்கம் (கதிர்ராசன்) தம்பதிகளின் புதல்வனும் அமரர்களான முருகேசு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ரவீந்திரபாலேஸ்வரியின் (ரவி) அன்புக் கணவரும் முகுந்தன் (சுவிஸ்), சுதர்சனா (சுவிஸ்), அமரர் கபிலன், மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசீகரன் (சுவிஸ்), யாழினி (சுவிஸ்), சுனித்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகாலிங்கம் இராஜேஸ்வரி, அமரர் பிரான்சிஸ் சேவியர் ஸ்ரீதேவி, அமரர் செல்வமாணிக்கம் (உருத்திரா), ஜெயா மனோரஞ்சிதம், பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விக்கினேஸ்வரன், தர்மராசா (இத்தாலி), நவரத்தினம் (லண்டன்), யோகநாதன் செல்வராணி, இரத்தினேஸ்வரன் உதயமலர், நவநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.01.2020) பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறீரங்கம்,
நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(C-9020)

தகவல்:
குடும்பத்தினர்
0773430567

### நீதிமன்ற செயற்பாடுகளில் தலையீடு

# உரையாடல் குறித்து பிரதம நீதியரசர் உரிய நடவடிக்கை எடுத்திருப்பார்!

## பிரதமர் மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

**நீதிமன்ற செயற்பாடுகளில் தலையீடு மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டு வெளியாகியுள்ள தொலை பேசி உரையாடல்கள் தொடர்பாக பிரதம நீதியரசர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருப்பார் என தான் நம்புவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அலரி மாளிகையில் ஊடக நிறுவனத் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்தில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் தொலைபேசி உரையாடல் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவிடம், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 5 மணி நேர வாக்கு மூலம் பதிவு செய்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டர் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுத் திங்கட் கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இந்தக் கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத 300 இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

கடந்த அரசால் வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தின் போது தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு நியமன த்தை பெற்றுத் தருமாறு கோரி இந்தப் போராட்டத்தை தொண்டர் ஆசிரியர்கள் முன்னெடுத்த னர்.

இந்நிலையில் வடமாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்தில் இல்லாத நிலையில் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும் என ஆளுநரின் ஊடகச் செயலாளர் எஸ்.முகுந்தன் உறுதியளித்ததை அடுத்து போராட்டம் நிறுத்தப்பட்டது (இ-10-114)

---

# 4 இலட்சத்து 61 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை

## நிதியமைச்சர் நிர்மலா தகவல்

(சென்னை)

குடியுரிமை திருத்தச் சட்டத்தால் பழைய நடைமுறைகளில் எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் 1964 முதல் 2008 வரை 4 இலட்சத்து 61 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதென இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த கூட்டத்தில் நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவிக்கையில்,

"குடியுரிமை திருத்தச் சட்டம் யாருடைய குடியுரிமையையும் நிராகரிக்கும் சட்டமல்ல. புதிய குடியுரிமையை வழங்குவதற்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளில் மத ரீதியாக துன்புறுத்தலுக்குள்ளான சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கவே திருத்தம் கொண்டுவரப்பட்டது. என். ஆர்.சி. என்.பி.ஆருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை.

இந்தக் குடியுரிமை திருத்தச் சட்டத்தால் பழைய நடைமுறைகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. 1964 முதல் 2008 வரை 4 இலட்சத்து 61 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமை பார்க்கும் போது வேதனையாக உள்ளது. சி.ஏ.ஏ பற்றிப் பேசுவோர் அகதிகள் முகாம் பற்றிப் பேசுவதில்லை. மனித உரிமையைப் பற்றிப் பேசாதவர்கள்தான் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக பேசுகிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென்னாபிரிக்காவை இன்னிங்ஸால் வீழ்த்தியது இங்கிலாந்து

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி, முன்னிலை பெற்றுள்ளது.

போர்ட் எலிசெபத் மைதானத்தில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடு ப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 499 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 209 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

290 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணி, தென்னாபிரிக்கா அணியை போலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 237 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 24ஆம் திகதி ஜோகனஸ்பேர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இலங்கைக்கெதிராக சிம்பாவே

## முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்கள் குவிப்பு

இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிம்பாவே அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 358 ஓட்டங்களை குவித்துள்ளது.

சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணியானது சிம்பாவேயுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதன் முதல் போட்டி நேற்று முன்தினம் ஹாரேயில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது. சிம்பாவே அணி நேற்று முன்தின முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் டுக்களை இழந்து 189 ஓட்டங் களை பெற்றது.

க்ரெய்க் ஏர்வின் 55 ஓட்டங்களுடனும், பிரண்டன் டெய்லர் 13 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந் நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம நேற்று ஆரம்பிக்க சிம்பாப்வே அணி தனது முதல் இன்னிங்ஸிக்காக 148 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 358 ஓட்டங்களை குவித்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய லசித் எம்புலுதெனிய 5 விக்கெட்டுக்களையும், சுரங்க லக்மல் 3 விக்கெட்டுக்களையும், லஹிரு குமார 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய இலங்கை அணி இரண்டாம் நாள்

ஆட்ட முடிவில் 42 ரன்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

# சிம்மன்ஸ் 10 சிக்ஸர்களை விளாச

## அயர்லாந்தை அதிரடியாக வென்றது மே.தீவுகள்

அயர்லாந்து அணிக்கெதிரான மூன்றாவதும், இறுதியுமான ரி-20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது.

சென்.கிட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கெவீன் ஒ பிரையன் 36 ஓட்டங்களையும், ஹென்ரிவ் பால்பிரையன் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சில், கிரன் பொலார்ட் மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ரொமாரியோ செப்பர்ட் மற்றும் செர்பன் ருத்தர்போர்ட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 139 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 11 ஓவர்கள் நிறைவில் வெறும் ஒரு விக்கெட்டினை மட்டும் இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது லெண்ட்ல் சிமொன்ஸ் ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களையும், எவின் லிவீஸ் 46 ஓட்டங்களையும், நிக்கோலஸ் பூரான் ஆட்டமிழக்காது 1 ஓட்டத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்து வீச்சில், சிமி சிங் 1 விக்கெட்டினை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 40 பந்துகளில் 10 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட லெண்ட்ல சிம்மன்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# டோனியை முந்திய விராட் கோலி

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி, நேற்று முன்தினம் இடம் பெற்ற அவுஸ் திரேலியாவுடான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் மகேந்திர சிங் டோனியின் சாதனையை முறியடித்துள்ளார்.

இந்திய மற்றும் அவுஸ் திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியானது நேற்று முன்தினம் பெங்களூரில் இடம்பெற்றது.

இப் போட்டியில் இந்திய அணியின் தலைவர் விராட் கோலி மொத்தமாக 91 பந்துகளை எதிர்கொண்டு 8 பவுண்டரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களை குவித்தார்.

நேற்று முன்தினம் இன்னிங்ஸில் கோலி 22.3 ஆவது ஓவரில் ஒரு நான்கு ஓட்டத்தை விளாசித் தள்ளி, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் தலைவராக இருந்து 5000 ஓட்டங்களை விரைவாக கடந்த வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்தார்.

இதனால் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் தலைவராகவிருந்து 5000 ஓட்டங்களை விரைவாக பெற்ற வீரர் என்ற டோனியின் சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் தலைவராகவிருந்து 5000 ஓட்டங்களை பெற்ற வீரர் பட்டியலில் இந்திய அணியின் தலைவர் விராட் கோலி முதலிடத்திலும் (82), இந்திய அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் டோனி (127) இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

31 வயதான விராட் கோலி இதுவரை 245 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 43 சதங்கள், 57 அரைச் சதங்கள் அடங்கலாக 11792 ஓட்டங்களை குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிசப் பன்டுக்கு ஆப்பு வைத்து கே.எல் ராகுல்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது ரிஷப் பண்ட் விக்கெட் கீப்பராக செயற்பட்டார். பேட் கம்மின்ஸ் வீசிய பந்து அவரின் ஹெல் மெட்டில் தாக்கியதால் மூளையதிர்ச்சி ஏற்பட்டு வெளியேறினார்.

2-வது போட்டியில் கேஎல் ராகுல் விக் கெட் கீப்பராக பணியாற்றினார். சிறப்பாக பேட்டிங் செய்ததுடன், கேட்ச் மற்றும் ஸ்டம்ப் பிங்கிலும் அசத்தினார். இதனால் 3-வது போட்டிக்கு ரிஷப் பண்ட் தயாரானபோதும் கேஎல் ராகுல்தான் விக்கெட் கீப்பராக பணி யாற்றினர்.

இவர் விக்கெட் கீப்பராக பணியாற் றினால் கூடுதலாக ஒரு பேட்ஸ்மேனை சேர்க்க முடியும். பேலன்ஸ் கொண்ட அணியை தேர்வு செய்ய முடியும். ஆகை யால் அவர் விக்கெட் கீப்பர் பணியை தொடர்ந்து செய்வார் என்று விராட் கோலி தெரிவித்துள்ளார். இதனால் ரிஷப் பண்ட் விக்கெட் கீப்பர் பணிக்கு திரும்புவது சந்தேகமே.

# நவரசன் அபார பந்து வீச்சு

## இறுதிப் போட்டியில் நொதேண் Black

(யாழ்ப்பாணம்)

நவரசனின் அபார பந்து வீச்சால் கொண்டலடி ராஜா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது நொதேண் Black அணியினர்.

நொதேண் விளையாட்டுக் கழகம் தைப் பொங்கல் விழாவினை முன்னிட்டு 7 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தி வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அரியாலை சனசமூக நிலையம், வேல் முருகன், கொண்டலடி ராஜா, யமுனா ஏரி வீரா யகர், தாவடி அணி, G.P.S, K.C.C, நொதேண் Black ஆகிய அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் முதலாவது அரையிறுதிக்கு நொதேண் Black அணியும் கொண்டலடி ராஜா அணியும் தெரிவாகியது. நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நொதேண் Black அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 53 ஓட்டங்கள் பெற்றது. துடுப்பாட்டத்தில் நி.பிரசாந்த் (புளுக்காஸ்) 27 ஓட்டங்களையும் நிசாந்தன் (கடுவன்) 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

54 என்ற வெற்றி இலக்கை கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொண்டலடி ராஜா அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 33 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. அபாரமாக பந்து வீசிய நவரசன் ஒரு ஓவரில் 3 விக்கெட்டினை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வித்திட்டார். (ம)

# ஐ.எஸ். உறுப்பினர் மொஹமட் அசாருதீனின் குரல் மாதிரியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை

(டில்லி)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் குறித்து அறிந்திருந்ததாக சந்தேகிக்கப்படும் கோயம்புத்தூரைச் சேர்ந்த ஐ.எஸ். உறுப்பினர் மொஹமட் அசாருதீனின் குரல் மாதிரியை பெற்றுக்கொள்ள இந்திய தேசிய விசாரணை பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய தேசிய விசாரணை பணியகம் நீதிமன்றத்திடம் முன்வைத்த மனு மூலம் பெற்றுக்கொண்ட அனுமதியின் கீழ் இந்த குரல் மாதிரி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

கோயம்புத்தூரை பிறப்பிடமாக கொண்ட மொஹமட் அசாருதீன் தமிழகம் மற்றும் கேரளாவிலுள்ள இளைஞர்களுக்கு அடிப்படைவாத கருத்துக்களை பரப்பியுள்ளாரா? என்பது தொடர்பாக அந்த குரல் மாதிரி மூலம் உறுதி செய்துகொள்ளப்படவுள்ளது.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளின் போது அடிப்படைவாத கருத்துக்கள் அடங்கிய குரல் பதிவு மற்றும் காணொலிகள் இந்திய தேசிய பொலிஸ் பிரிவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மரண அறிவித்தல்

மண்மகிழ் 02.01.1938 — கண்நெகிழ் 18.01.2020

### கணேசுஐயா தனபாக்கியம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கணேசுஐயா தனபாக்கியம் அவர்கள் 18.01.2020 சனிக் கிழமை அதிகாலை 4.25 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சரஸ்வதி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற கணேசுஐயா ஆகியோரின் மனைவியும் காலஞ் சென்றபரமேஸ்வரி, காலஞ்சென்ற தர்மபூபதி மற்றும் அருணநாயகி, இராதாநாயகி, காலஞ்சென்ற தர்மஞானசிங்கம், காலஞ்சென்ற வரதன், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சதானந்தசிவம், நந்தகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற துரவாகரன் (மதி) மற்றும் ஸ்ரீரஞ்சனா, கமலேஸ்வரி (கமலா), கமலேஸ்வரன் (கண்ணன்), சசிகலா (சசி), தயாபரன் (பிரான்ஸ்), கனகலிங்கம், காலஞ்சென்ற கனகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செந்தினி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் கமலதாஸ் (அசோக்), சர்வகுமாரி, புஸ்பராஜ் (கண்ணன்) (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை பணியாளர்), சிவாஜினி(கவி), பவளம், தருணாகரஐயர், காலஞ்சென்ற திருட்செல்வம், மற்றும் கிருஸ்ணகுமாரி (வசந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2020) புதன்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் உடுவில் புளியடி வைரவர் கோவிலடியில் உள்ள மகன் கண்ணனின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-9012)

புளியடி வைரவர் வீதி, உடுவில். 077 949 4602 தகவல்: குடும்பத்தினர்

# நீதிபதி கிஹானிடம் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

நீதிபதி கிஹான் பிலபிட்டியவிடம் கொழும்பு குற்றவியல் பிரிவு வாக்குமூலம் பதிவு செய்தது.

நீதிபதியிடம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணித்தியாலம் வரை வாக்குமூலம் பெற்றுக்கொண்டதாக கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்தது.

சட்டமா அதிபரின் உத்தரவிற்கமையவே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் சர்ச்சைக்குரிய வகையில் நீதிமன்ற செயற்பாடுகள் குறித்து உரையாற்றியமை தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இதேவேளை, சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல்கள் தொடர்பில் கொழும்பு உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பத்மினி எம்.ரணவக்க மற்றும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நீதிபதி தம்மிகா ஹேமபால ஆகியோரிடமும் கொழும்பு குற்றவியல் பிரிவு வாக்குமூலங்களைப் பதிவு செய்து கொள்ளவுள்ளது.

சர்ச்சைக்குரிய குரல் பதிவுகள் குறித்து நீதிபதிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கொழும்பு குற்றவியல் பிரிவின் பணிப்பாளருக்கு சட்டமா அதிபர் தம்புல டி லிவேரா கடந்த 16 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


28 ஆம் ஆண்டு நினைவுஞ்சலி

அமரர்

இ.ச.பேரம்பலம் (E.S.P)

(வரிவளவு, காரைநகர்)

துவாதசி திதி 21.01.2020

அன்பின் திருவுருவே அமைதியின் சிகரமே
பாசத்தின் பிறப்பிடமே பார் போற்ற வாழ்ந்தீர்
ஊரும் உறவும் பிரிந்து வானுலகு சென்று
ஆண்டுகள் இருபத்தெட்டு அகன்றோடி விட்டாலும்
ஆறுமோ நம் துயரம் தங்கள் ஆத்மா சாந்திபெற
வாரிவளவு கற்பக விநாயகரைப்
பிரார்த்தித்து நிற்கிறோம்.

(C-9011)

383, மணிஓசை,
கோவில் வீதி, நல்லூர்.

கல்விக்காருண்யன்
லயன் E.S.P. நாகரத்தினம் (PMJF)
குடும்பத்தினர்.

# நீதி நூல் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வருடாந்தம் நடத்தி வரும் நீதி நூல் மனனப் போட்டி இவ்வாண்டும் நடைபெறவுள்ளது.

தரம் 1, 2, 3 மாணவர்களுக்கு இப்போட்டி இடம்பெறவுள்ளது. தரம் ஒன்றிற்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் முதல் 10 வரிகளும் தரம் இரண்டிற்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் முதல் 15 வரிகளுடன் உலக நீதியில் முதல் பாட்டும் தரம் மூன்றிற்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் முதல் 20 வரிகளுடன் உலக நீதியில் முதல் 2 பாட்டுக்களும் மனனம்செய்துஒப்புவித்தல்வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மகாசிவராத்திரியன்று வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச்செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ

# ஜேர்மன் மற்றும் பிரான்ஸில் இலங்கையர்கள் மூவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாட்டின் இலங்கைத் தூதரகங்களிலிருந்து மூன்று இலங்கையர்கள் காலமாகிவிட்டதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பில் அவர்களின் சட்டரீதியான உறவினர்கள் தொடர்புகளைப் பெறமுடியாமல் இருப்பதால் இவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுமாறு வெளிவிவகார அமைச்சின் யாழ்.பிராந்திய கொன்சூலர் அலுவலக உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

1. இறந்தவர் பெயர்:- சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை
பிறந்த திகதி:- 30.06.1935
பிறந்த இடம்:- மீசாலை
தேசிய அ.அ.இல.:- 351820365V
இறந்த இடம்:- ஜேர்மனி

2. இறந்தவர் பெயர்:- திருமதி லூர்த்துமேரி அந்தோனிப்பிள்ளை
பிறந்த திகதி:- 04.05.1934
பிறந்த இடம்:- வயாவிளான்
இறந்த திகதி:- 20.10.2019
இறந்த இடம்:- ஜேர்மனி

3. இறந்தவர் பெயர்:- அருளப்பு விக்ரர்
பிறந்த இடம்:- யாழ்ப்பாணம்
பிறந்த திகதி:- 26.11.1950
இறந்த இடம்:- பிரான்ஸ்

விபரங்கள் அறியப்படின் பின்வரும் முகவரிக்கும் இலக்கங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:- பிராந்திய கொன்சியூலர் அலுவலகம்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.:-021 221 5972
தொலைநகல் இல.ஸ்ரீ:- 021 221 5970
email:- jaffna.consular@mfa.gov.lk என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## வெற்றிதரும் நட்சத்திர குறியீடுகள்

ஜோதிட சாஸ்திரத்தில் இருப்பத்தியேழு நட்சத்திரங்களுக்கும் உருவம் அல்லது குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை நாம் வெற்றிச் சின்னங்களாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். எப்படியென்றால் நாம் வசிக்கும் வீடு, பணிபுரியும் இடம், அணியும் ஆடை, அறிமுக முகவரி அட்டை (Visiting Card) கடித முகவரி ஏடு (Visiting Card) இவைகளில் அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை சின்னங்களாக பயன்படுத்தி வந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம். இதற்கு ஆதாரம் ஏதாவது கிடைக்குமா என்பதை ஆய்வு செய்த போது புராண இதிகாசங்களில் ஆதாரம் இருப்பதை அறிய முடிந்தது. அவைகளைப் பார்ப்போம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஜென்ம நட்சத்திரம் ரோகினியாகும். ரோகினி நட்சத்திரத்தின் உருவம் தேராகும். ஸ்ரீ கிருஷ்ணர் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களுக்கு மகாபாரதப் போரில் வெற்றி தேடித் தந்தார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசமாகும். புனர்பூசம் நட்சத்திரத்தின் உருவம் வில்லாகும். ஸ்ரீராமர் வில்லேந்தி ராவணை வெற்றி கொண்டார்.

பகவான் ஸ்ரீவாமனரின் ஜென்ம நட்சத்திரம் திருவோணமாகும். திருவோணம் நட்சத்திரத்தின் உருவம் மூன்று பாதக்கவடுகள் எனக் கூறப்படுகிறது. ஸ்ரீவாமனர் ஈரேழு உலகையும் ஈரடியாய் அளந்து மூன்றாவது அடியை மஹாபலி சக்கரவத்தியின் தலையில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார். எனவே ஸ்ரீவாமனருக்கு உலகளந்த பெருமாள் என்னும் நாமம் உண்டு.(தொடரும்)

| | | |
|---|---|---|
| ரோஹிணி | ஹஸ்தம் | திருவோணம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |
|  பூசம் | அனுசம் |  உத்திரட்டாதி |

## இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

ராகு
கூரி, புத
சனி,குரு கேது
சந், செவ்

**21.01.2020**

தை 07, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
துவாதசி பின்னிரவு 3.25 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்
வாழ்க்கை ஒரு மலர்ப்படுக்கை அன்று

**வளவன்**

**மீனம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மேடம்**
மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு, தேவையற்ற விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன நன்மையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**மிதுனம்**
கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்**
தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பெண்கள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**
குடும்பத்தினிடையே ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**தனுசு**
காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், தேவையற்ற கற்பனைகளை கைவிடுவது நல்லது, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்**
மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தொழில் நலன் கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு, தெம்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வார்த்தைகளால் மற்றவர்களை எளிதில் கவர்வீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி**
உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,. வியாபார விருத்தியுண்டு, குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்**
செய்தொழிலில் ஆர்வத்துடன் கலந்து கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

# மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

## திரு.திருநாவுக்கரசு தேவதயாளன்

(21.01.2020)

யா/இணுவில் இந்துக் கல்லூரியில் அதிபராக சேவையாற்றிய மணிவிழா நாயகனை எல்லாம் வல்ல இறைவன் ஆசி பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்

Congratulations!

அன்போடு இன்முகம் காட்டியே
அறிவோடும் பண்போடும் பணியாற்றினீர்-தினம்
இன்போடு யாவரின் நலன்பேணியே
அவர்மாண்பிற்கு வழியாகினீர்
கண்ணாகவே பாடசாலையை எண்ணியே
எந்நாளும் பணியாற்றினீர்-தினம்
உண்ணாது உறங்காது ஓயாது ஒழியாது
சலியாது உழைத்து நின்றீர்

1934

ஆசிரியர்
நலன்புரி கழகம்
(யா/இணுவில் இந்துக் கல்லூரி)




குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் வருடாந்தத் திருவாசக முற்றோதல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (படம்:- குப்பிழான் செய்தியாளர்)

# முதலாம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை நாற்பதாக அதிகரிப்பு

(கொழும்பு)

முதலாம் வகுப்பில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை நாற்பதாக அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னதாக நீதிமன்ற உத்தரவின்படி 35 மாணவர்கள் மாத்திரமே முதலாம் வகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இருப்பினும் நீதிமன்றத்தின் முடிவை மறுஆய்வு செய்வதற்கும், மாணவர்களின் எண்ணிக்கையை 40 ஆக உயர்த்துவதற்கும், உயர்நீதிமன்றத்தின் அனுமதியை பெற கல்வி அமைச்சர் முன்வைத்த திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அறிவித்துள்ளது. (இ-7)


## யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடலும்,பொதுக் கூட்டமும்-2019

2020.02.02 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எமது ஒன்று கூடல் நடைபெறும்.

தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். வதிவிட மாற்றம் உடையவர்கள் செய லாளருடன் தொடர்பு கொள்ளவும்.முன்மொழிவுகள், பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 27.01.2020 க்கு முன் எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும்.

மு.ஜெகதீசன்(செயலாளர்)
இல.190,காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி இல: 076 897 7875

# வேலையாட்கள் தேவை

நெல்லியடி நகர்ப் பகுதியில் இயங்கும் ஐஸ்கிறீம் கடையொன்றிற்கு பால்கோவா, பூந்தி லட்டு, தொதொல்,மஸ்கட் போன்ற இனிப்புப் பல காரங்கள் தயாரிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

விருப்பமுடையவர்கள் கீழ்க்காணும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும்.

* சம்பளம் வேலை அனுபவத்திற்கேற்ற வகையில் வழங்கப்படும்.
* ஐஸ்கிறீம் கடை அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

(சி-9014)

தொடர்பு இலக்கம் - 076 424 8835


# ரணிலுக்கு கூடுதல் பாதுகாப்பு

## ஐ.தே.க.எம்.பி.எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவிற்கு கூடுதல் பாதுகாப்பு வழ ங்கப்படுவதனை எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் மனுச நாணயக்கார தெரிவித் தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப் பிற்காக 200 பாதுகாப்பு உத்தியோக த்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவது சர்ச்சைக்குரியது என அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கூடுதலான வரப் பிரசாதங்களை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலியில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செய லகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அனைத்து வர்த்தகர் களினதும் (ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுவைகள், அளவைகள் மற்றும் நிறுக்கும் அளக்கும் கருவிகளிற்கு சரிபார்த்து குறித்த வருட த்திற்கு 20.01.2020 - 23.01.2020 ஆகிய காலப்பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை முத்திரைகளிடப்ப டவுள்ளது எனவும் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் குறித்த 12 மாதங்களுக்குள் முத்திரை பதிக்காத நிறுக்கும் அளக்கும் உபகர ணங் களை வர்த்தகத்திற்கு பாவிப்பது மாத்தி ரமல்ல வைத்திருப்பதும் தண்ட னைக்குரிய குற்றமெனவும் அறிவித்து ள்ளனர். (இ-9)


# இந்து பௌத்த கலாசாரப் பேரவை சிங்கள ஆசிரியர் பயிற்சி நெறி

இந்து பௌத்த கலாசார பேரவையின் 2020ஆம் ஆண்டிற்கான இரண்டாம் மொழி சிங்கள ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கல்வித்தகைமை - க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களிலி் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். கற்பித்தல் இலவசம்.

கற்கை நெறிக்கான காலம்-6 மாதங்கள்
(600 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்)
G.C.E (O/L),G.C.E(A/L) பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு விசேட சிங்கள மொழிப்பயிற்சி நெறி வடமாகாண அரச பாடசாலைகளில் சனி,ஞாயிறு தினங்களில் பெப்ரவரி மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

* கற்பித்தல் இலவசம்.
* கற்கை நெறி 120 மணித்தியாலம் (06 மாதங்கள்)
* விண்ணப்ப முடிவுத் திகதி -31.01.2020

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி-9013)

தொலைபேசி இல -: 077 271 1181
தலைமை காரியாலயம் -: சங்கானை வீதி,
அச்சுவேலி.

# விசமாகயிருந்த எரிபொருள் விலைச் சூத்திரம்

# அரசிற்கு தற்போது அமிர்தமாக மாறியுள்ளது

## ஜே.வி.பி.அரசியல் சபை உறுப்பினர் கடும் விசனம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வரும் இரகசிய சூழ்ச்சி காரணமாக தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியின் பணிகளை செய்ய அவர்கள் தவறியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டினார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த - ரணில் இடையிலான உடன்பாடு காரணமாகவே ரணில் கட்சியை விட்டு செல்லாமல் இருக்கின்றார்.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் திருடர்களுடன் உடன்பாடு செய்து, அவர்களை பாதுகாத்து தாலாட்டி வந்தனர்.

கடந்த அரசாங்கத்தில் விசமாக இருந்த எரிபொருள் விலை சூத்திரம் தற்போதைய அரசாங்கத்திற்கு அமிர்தமாகியுள்ளது.

எரிபொருள் சூத்திரம் சுவையாக இருப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தற்போது கூறுகிறார். அரசாங்கம் முன்வைக்கும் அனைத்து யோசனைகளும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் எனக் கூறுகிறது.

ஏன் மார்ச் மாதம் இரண்டாம் திகதி இரவு நாடாளுமன்றம் கலைக்கப்படும். நாங்கள் நாடாளுமன்றத்தை கலைத்து விட்டோம், கூறியவற்றை செய்ய நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை எமக்கு தாருங்கள் என கூறுவார்கள்.

நாடாளுமன்றத்தை கூட்டாமல், நாட்டின் அரச நிறுவனங்களுக்கு பிரதானிகளை நியமிக்காமல் நாட்டை எப்படி நிர்வாகம் செய்ய முடியும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனைகளை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வாருங்கள்.

நாங்கள் கைகளை உயர்த்தி அதனை நிறைவேற்றுவோம் எனவும் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## கெஹலிய,ஜயம்பதி இருவரும் ஊழல் வழக்கிலிருந்து விடுதலை

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன் கெந்த ஆகியோர், இலஞ்ச ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வெகுசன ஊடக அமைச்சராக, கெஹலிய ரம்புக்வெல இருந்த வேளையில், அவரது தனிப்பட்ட தொலைபேசி பட்டியலை, அச்சு திணைக்களத்தின் நிதியில் செலுத்தியதாக குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கின் மற்றைய சந்தேக நபராக அரசாங்க அச்சு திணைக்களத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன்கெந்த

பெயரிடப்பட்டிருந்தார்.

முன்னதாக, இவர்கள் இருவருக்கும் எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை தொடர்ந்தும் விசாரிக்க முடியாது என்று கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த மாதம் 20ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## பௌசியின் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் முடிவு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம். பௌஸி தாக்கல் செய்த மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை முடிவு செய்துள்ளது.

அந்தவகையில் சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்து தன்னை பதவியில் இருந்து நீக்குவதற்கான முடிவு இரத்து செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்து தாக்கல் செய்த மனு எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, கட்சியின் ஒழுக்காற்றுக் குழு மற்றும் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் உட்பட 14 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், நீதிபதிகள் விஜித் மலல்கொட, எஸ்.துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை விசாரிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## விசேட கல்வி அலகு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் விசேட கல்வி அலகு திறப்பு விழா இன்று 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அதிபர் த.லோகராஜா தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட கல்வி) யோ. துஷ்யந்தன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப் பாணம் JSAC இணை இணைப் பாளர் ந. சுகிர்தராஜ், வலிகாமம் வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி) அ. தினேஷ்குமார் ஆகியோர்கலந்துகொள்வர்.(இ-5-78)

## எம்.பிக்கள் கைது; சபாநாயகரின் கோரிக்கையை நிராகரித்தது சட்டமா அதிபர் திணைக்களம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்யும் போது அவர்களின் சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற சபாநாயகர் கரு ஜெயசூரியவின் கோரிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்தினரும் பொலிஸாரும் நிராகரித்தனர்.

அண்மையில் கரு ஜெயசூரியவுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவ் வாறு கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்

யப்பட்ட பின்னர் சட்டத்தரணி ஒருவர் அங்கு பிரசன்னமாகலாம் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தினர் இதன்போது தெரிவித்தனர்.

இதேவேளை தாம் கைது செய்யப்படும் போது நாடாளுமன்ற உறுப்பினர் அந்த இடத்துக்கு செய்தியாளர்களை அழைப்பது பொலிஸாரின் கடமைகளை குழப்பும் செயலாகும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது கைத்துப்பாக்கிகளுக்கான அனுமதிகளை புதுப்பிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தம்மிடம் சுட்டிக் காட்டியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.எனவே அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-7)

## முதியோர்களுக்கு உதவிகள்



(சிறுப்பிட்டி)

செரண்டிப் நிறுவன அனுசரணையில் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கு போர்வைகள், புடைவைகள் மற்றும் நிதியுதவி என்பன வழங்கப்பட்டன.

நிலையத்தலைவர் அப்பன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், இலங்கைக்கான செரண்டிப் நிறுவன இணைப்பாளர் அ.கந்தசாமியும் கலந்து கொண்டார். (இ-7)

## கோலம்,மாலை,தோரணப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய கலை,கலாசார விழுமியங்களை விருத்தி செய்யும் பொருட்டு வருடாந்தம் நடத்தி வரும் செயல்முறைப் போட்டி இவ் வாண்டும் நடைபெறவுள்ளது.

கோலம் போடுதல் , மாலை கட்டுதல்,தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் கீழ்ப் பிரிவு,மத்திய பிரிவு என்னும் இரு பிரிவுகளில் பங்குபற்றும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு தரம் 4 தொடக்கம் தரம் 7 வரையும்,மத்திய பிரிவு தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ளது.இப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி யாழ். நகரப் பாடசாலை ஒன்றில் இடம் பெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மஹா சிவராத்திரியன்று வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலர் சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2020-12.02.2021

விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைக் குரு பார்க்கிறார். தன சப்தமாதிபதியாக விளங்கும் சுக்கிரன், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் இருக்கும். இருப்பினும் அதற்காக பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலையும் உருவாகும்.

அஷ்டமத்துச் செவ்வாயின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் முன்யோசனையுடன் செய்வது நல்லது. பழைய முயற்சியில் ஈடுபட்டாலும் சரி, புதிய முயற்சியில் ஈடுபட்டாலும் சரி குடும்பப் பெரியவர்களையோ, அனுபவமிக்கவர்களையோ கலந்து ஆலோசித்துச் செய்யுங்கள். ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய நேரம். இந்த மாதத்தில் எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள், இரத்தசோகை, ஹார்மோன் பிரச்சினைகள், தூக்கம் குறைவால் மந்தநிலை, சோம்பல் போன்றவை ஏற்படும். எந்த மாதிரியான தாக்கங்கள் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

செவ்வாய் எட்டில் இருந்து 9 ஆம் இடத்திற்கு செல்லும் வரை, நீங்கள் கொஞ்சம் கவனத்தோடு செயற்பட வேண்டும். வாக்கு ஸ்தானத்தைச் செவ்வாய் பார்ப்பதால் பேசும்பொழுது சொற்கள் கூட கொஞ்சம் கடுமையானதாக வரலாம். அதன் காரணமாக உறவில் விரிசல் ஏற்படுவதும், உள்ளத்தில் அமைதி குறைவதும் உருவாகலாம்.

குடும்ப உறுப்பினர்களை கொஞ்சம் அனுசரித்துச் செல்வது நல்லது. இடம், வீடு வாங்கியதை ஒருசிலர் விற்க நேரிடலாம். உறவினர்களின் வார்த்தையை நம்பி செயற்படுவதன் மூலம் உள்ளத்தில் சில சமயங்களில் நெருடல் உண்டாகும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான். குருவின் பார்வை பலம் ஒன்றே கைகொடுக்கும் மாதம் இது. எனவே வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி, குருவை வழிபடுங்கள். வெள்ளிக்கிழமை விரதம் இருந்து அம்பிகையை வழிபட்டால் உலகம் போற்றும் வாழ்க்கை அமையும்.

### கும்ப புதன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் புதன், சூரியனோடு இணைந்து மகர இராசியில் சஞ்சரிக்கிறார். இதனால் புத-ஆதித்ய யோகம் உருவாகிறது. பின்னர் ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்கு செல்லும் புதன், அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே பொருளாதார வளர்ச்சி கூடும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் தானாகவே வந்து சேரலாம். வெளி நாட்டில் பணிபுரிய ஆசைப்பட்டவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அதில் இப்போது வெற்றி கிடைக்கும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். மீன இராசி என்பது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். எனவே தன, சப்தமாதிபதி வலிமைபெறும் இந்த நேரத்தில் வருமானம் உயரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

பெண்களால் பெருமை சேரும். வாழ்க்கைத் துணை அமையவில்லையே என்றும், வரன்கள் வந்து வந்து கைநழுவிச் செல்கிறதே என்றும் கவலைப்பட்டவர்களுக்கு, இனி மனம் மகிழும் விதத்தில் மங்கல ஓசை இல்லத்தில் கேட்கப் போகிறது.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், மருத்துவச் செலவுகளைக் கொடுத்து மனக்கலக்கத்தை உருவாக்கலாம். அவர் பெப்ரவரி 9 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான தனுசு இராசிக்கு சென்றதும், உன்னதமான நிலை உருவாகும். புதிய திருப்பங்கள் ஏற்படும். தாழ்வு மனப்பான்மை அகலும். தன்னிச்சையாகச் செயற்பட்டு தடைகளைப் போக்கிக்கொள்வீர்கள். இதுவரை சிந்திய வியர்வைக்கு இப்பொழுது நல்ல பலன் கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப் பொறுப்புகள் கூட தானாக வந்து சேரலாம்.

இம்மாதம் சஷ்டி கவசம் பாடி சண்முக நாதப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். மாதத் தொடக்கத்தில் செவ்வாய் 8 இல் இருப்பதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். வாக்கு ஸ்தானத்தைச் செவ்வாய் பார்ப்பதால், குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, கூட இருப்பவர்களாக இருந்தாலும் சரி அவர்களின் உறவில் விரிசல்கள் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குரு பார்ப்பதால் பணப்பற்றாக் குறையை சமாளித்து விடுவீர்கள். எப்படியாவது கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்க செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். தைப்பூசத்தன்று தங்க இரதத்தில் பவனி வரும் வேலவனையும் தை அமாவாசையன்று முன்னோர்கள் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்ளுங்கள்.

## அஷ்டமத்துச் செவ்வாயால் அலைச்சல் அதிகரிக்கும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தொழில்ஸ்தானத்தில் பலம்பெற்றிருக்கிறார். அவரை சகாய ஸ்தானாதிபதி சந்திரன் பார்க்கிறார். எனவே தொழில் சீராக நடைபெற்று, செல்வ நிலையை எட்டும்.

அஷ்டமத்தில் சனி, குரு, கேது ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கின்றன. என்னதான் நாம் கவனத்துடன் இருந்தாலும் அஷ்டம ஸ்தானம் வலுப்பெறும் இந்த நேரத்தில் அதிக விரயங்களும், ஆதாயமற்ற அலைச்சல்களும், பலம்பெற்ற எதிரிகளால் தொல்லைகளும், பக்கத்தில் இருப்பவர்களை நம்பிச் செயல்பட முடியாத சூழ்நிலைகளும் உருவாகத்தான் செய்யும். எனவே எதைச் செய்தாலும் சிந்தித்துச் செய்யுங்கள். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களில் ஒருசில கைநழுவிச் செல்லலாம். இருப்பினும் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கைவிட்டுவிடாதீர்கள். பகைக்கு மத்தியில் வாழ்க்கை அமைந்தாலும், பலரும் பாராட்டும் விதத்தில் அது அமையும்.

செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், சிலருக்கு இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் ஏற்படலாம். உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடக் கூடாது. திட்டமிட்டு நீங்கள் செய்யும் பணிகளில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னால் பெரியளவு பாராட்டும் கிடைக்கும். பணி சார்ந்த பயணமாக, வெளிநாடு சென்று சம்பாதிக்கும் வாய்ப்பு உண்டு. 2 இல் ராகுவும், 8 இல் கேதுவும் இருப்பது சர்ப்ப தோஷமாகவே கருதப்படும். எனவே ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கை, ஒருநாள் பணநடமாட்டம், மறுநாள் கைமாற்று வாங்கும் சூழ்நிலை என்பதாக இருக்கும். நிலையான வாழ்வமைய சர்ப்ப கிரகங்களுக்குரிய ஆலயங்களுக்குச் சென்று சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனையும், தைப்பூசத்தன்று ஆறுமுகப்பெருமானையும், தை அமாவாசைஅன்று முன்னோர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

### கும்ப புதன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் இருக்கும் புதன், சூரியனுடன் இணைந்து புத - ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். கல்வி மற்றும் கலைகள் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பெற்றோர்களின் பாசமழையில் நனைவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். உங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்கு முழுமையாகக் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்கு, புதன் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத - சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக்கொடுப்பர். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் ஏராளமாக நடைபெறும். பிணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சொத்துக்கள் வாங்கும் யோகம் வந்து சேரும். "வெளிநாடு செல்லும் வாய்ப்பு எப்போது வரும்" என்று ஏக்கப்பெருமூச்சு விட்டவர்களுக்கு, இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் அழைப்புகள் வரப்போகிறது. வாய்ப்பை நழுவவிடாமல் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தனுசு செவ்வாய் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு சப்தம, விரயாதிபதியான செவ்வாய் ஏழாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பெப்ரவரி 9ஆம் திகதி அன்று 8 ஆம் இடத்திற்குச் செல்கிறார். 8ஆம் இடம் குருவிற்குச் சொந்த வீடான தனுசு இராசியாகும். எனவே எல்லோரையும் போல நீங்கள் அஷ்டமத்து செவ்வாயால் அல்லல்படும் சூழ்நிலை ஏற்படாது. குரு - மங்கள யோகம் அமைவதால் மணவிழா, மணி விழா, முத்துவிழா, பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டுவிழா போன்றவை இந்த காலகட்டத்தில் நடைபெறலாம். உடன் பிறப்புகளிடம் விரோத மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். வாங்கிய சொத்துக்களை தொழிலுக்கு மூலதனம் போடுவதற்காக, விற்கும் சூழ்நிலை உருவாகலாம். இம்மாத வெள்ளிக்கிழமைகளில் அம்பிகை வழிபாட்டையும், தைப்பூசத்தன்று முருகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் செவ்வாய் பார்வை இருப்பதால் உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தேவையான நேரத்தில் தேவையான செலவிற்கு பணம் வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை ஏற்பட அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளுக்கான சுபகாரியங்கள் காலா காலத்தில் நடைபெறும்.

8ஆம் இடத்தில் சனி இடம்பெற்றுள்ளதால், இடையிடையே சிறுசிறு உடல்நலக் கோளாறுகள் உருவாகலாம். மருத்துவச் செலவுகளும் ஓரளவு இருக்கத்தான் செய்யும். பிரதோஷ வழிபாடும், சனிக்கிழமையன்று ஆஞ்சநேயர் வழிபாடும் பிரச்சினைகளில் இருந்து விடுபடும் வாய்ப்பை ஏற்படுத்தும்.

## குடும்பச் சுமை கூடும் நேரம்!

(தொடரும்)

## எமது பிரதேசத்திற்கு ஒவ்வாத

# கொங்கிறீட் வீட்டை தடுத்து நிறுத்துவோம்

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**எமது பிரதேசத்திற்கு ஒவ்வாத கொங்கிறீட் பொருத்து வீடுகளை காட்டி ஏழ்மையில் உள்ள எமது மக்களை மஸ்தான் எம்.பி.ஏமாற்ற பார்க்கின்றார். அதனை நாம் தடுத்து நிறுத்துவோம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானால் கொங்கிறீட் வீடுகள் வன்னியில் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே பொருத்து வீடுகளை ஜக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில் கொண்டு வருகின்றபோது முழுமையாக எதிர்த்து நாம் நிறுத்தினோம். அதேபோல் இந்த விடயத்திலும் மக்களுக்கு ஒவ்வாத வீட்டுத்திட்டங்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் ஒரு விவாதத்தினை கேட்டு இந்த திட்டங்களை முறியடிப்பதற்கான ஏற்பாட்டை கட்டாயமாக செய்வோம்.

வீடில்லாத எங்கள் மக்களுக்கு இந்த வீடு கூட இல்லாமல் இருக்கின்றோமே என்ற கருத்து வரலாம். ஆனால் அந்த வீட்டுக்குள்ளே வாழ முடியாத நிலை காணப்படும். ஏனென்றால் எங்களுடைய நாட்டைப் பொறுத்தவரையில் உஷ்ணத்துடன் கூடிய வெயில் காலத்தில் எமது பிரதேசத்தில் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அவ்வாறான நிலையில் வெப்பத்தினை உறிஞ்சி உள்ளே வைத்துக்கொள்ளும் நிலையைத்தான் இந்த வீடுகள் செய்துகொண்டிருக்கின்றன.

வெளிநாட்டில் சாத்தியமான விடயம் எங்கள் நாட்டில் சாத்தியமற்ற விடயமாகும். எனவே மக்கள் விரும்புகின்ற வீட்டுத்திட்டத்தினையே நாம் பெற்றுக்கொடுக்க முயற்சிப்போம்.

எமது மக்கள் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள். வீடில்லாமல் இருக்கின்ற இந்தச் சூழலை பயன்படுத்திக்கொள்ள மஸ்தான் முற்படுகின்றார். எங்கள் மக்களின் ஏழ்மை மற்றும் இல்லாத நிலையை வைத்து இவர்கள் ஏமாற்றுவதை அனுமதிக்க முடியாது.

ஆகவே அவர்கள் எமது மக்களிடம் வாக்கு கேட்பதாக இருந்தால் இவ்வாறு ஏமாற்ற வேண்டாம். உண்மையை சொல்லி வாக்கு கேளுங்கள் என மேலும் தெரிவித்தார். (9-299)

## மருதங்குளம் புனரமைப்பு விரைவில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்த மருதங்குளத்தினை புனரமைப்பதற்குரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் உள்ள மருதங்குளம் கடந்த ஆண்டுபெய்த மழைவெள்ளம் காரணமாக உடைப்பெடுத்திருந்தது.

மேற்படி குளமானது சுமார் 450 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய குளமாகக் காணப்படும் இக் குளத்தின் நீர்க் கொள்ளளவானது 9 அடி 6 அங்குலமாக காணப்பட்ட நிலையில் குளத்தின் வான் பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டதனால் குளத்து நீர் வெளியேறி தற்போது 4 அடி 4 அங்குலமான நீரையே தேக்கக்கூடியதாக உள்ளது.

தற்போது காலபோக நெற்செய்கையில் பாதிப்புக்கள் ஏற்படாத போதும் சிறுபோகச் செய்கையே பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது இந்தக்குளத்தினை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதனை புனரமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது குளத்தின் நீர்க்கொள்ளவை மேலும் இரண்டு அடியால் அதிகரிப்பதுடன், வான் கதவுகளை அமைப்பதற்கான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக் குளத்தினைப் புனரமைப்பதற்கு 125 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டு ள்ளது என மேலும் தெரிவித்தனர். (9-315)

## காற்றாலைகளால் பாதிப்பில்லை

(நெளுக்குளம்)

மன்னார் பேசாலைப்பகுதியில் கரையோரத்தில் பொருத்தப்படவுள்ள காற்றாலைகளினால் சூழலுக்கு எவ்விதமான பாதகங்களும் ஏற்படாது. திருகோணமலை துறைமுகத்திலிருந்து வவுனியா ஊடாக மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படும் காற்றாலைகள் குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்து காற்றாலையால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு வெளிநாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையில் திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி காற்றாலைகள் வவுனியா - மன்னார் வீதியூடாக எடுத்துச்செல்லப்படுகின்றது.

இதற்கான அனுமதிகள் உட்பட பொலிஸாரின் பாதுகாப்புக்கள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டே பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகள் இன்றி இவை இரவில் எடுத்துச்செல்லப்படுகின்றன.

எனினும் பேசாலைப் பகுதியில் பொருத்தப்படும் காற்றாலைகளினால் சூழலுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படாது என்று ஆய்வுகளின் ஊடாக தெரியவந்துள்ளதென்று மேலும் தெரிவித்தார். (9-299)

## சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அறுவடை விழா

கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அறுவடை விழா நேற்று கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பண்ணையில் நடைபெற்றது. இதில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் கேணல் வியஜநாயக்க,சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் விசுவமடு கட்டளை அதிகாரி அநுர மலந்தனிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (9-100-315)

## புன்னை நீராவி கிராமத்தில் செயலிழந்துள்ள வீதி விளக்குகள்

### கிராமமக்கள் விசனம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட புன்னைநீராவி கிராமத்தில் பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் பழுதடைந்ததன் காரணமாக கிராமம் இருளில் மூழ்கிக்காணப்படுகிறது.

கரைச்சி பிரதேச சபையால் மேற்படி கிராமத்தின் வீதிகளுக்கு 14 வீதி விளக்குகள் பொருத்தப்பட்ட நிலையில் தற்போது இரண்டு மின் விளக்குகளை தவிர மிகுதி அனைத்தும் செயலிழந்துள்ளன.

இதனால் இரவு நேரங்களில் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் அவ்வீதிகளால் போக்குவரத்து செய்வதில் பாரிய இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை இந்த இருளினை பயன்படுத்தி திருடர்கள் தங்களின் கைவரிசைகளை காட்டியும் வருகின்றார்கள் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி விளக்கு தொடர்பாக கரைச்சி பிரதேச சபைக்கு பல முறை தெரியப்படுத்தியும் இது வரை எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ளதுடன் இது தொடர்பில் பிரதேச சபை விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-318)

## நெல்லுக்கான நிர்ணய விலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்- மஸ்தான் எம்.பி

(மன்னார்)

விவசாயிகள் வெள்ளத்தினாலும் வரட்சியினாலும் பாதிக்கப்படுகின்றனர். அவற்றில் இருந்து விவசாய மக்கள் இனியும் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்முதலுக்கான நிர்ணய விலை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருட இறுதியில் இடம் பெற்ற வெள்ளப்பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு அவற்றில் பாதிக்கப்பட்டு அழிவு அடைந்த நெற்செய்கைகளுக்கான நட்டஈடு வழங்குவதற்கான பணிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

தற்போது நெல் கொள்முதல் தொடர்பில் மக்களின் முறைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசி விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

## பொதுத் தேர்தலின் போது

# தமிழ் மக்களிடத்தில் மாற்றம் அவசியம்

## ஆனந்தன் எம்.பி கோரிக்கை



**(நெளுக்குளம்)**

**எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்கள் மத்தியில் மாற்றம் என்பது கட்டாயமானது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நான்கரை வருடங்களாக தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகள் என்ன செய்தார்கள் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள். ஒரு மாற்றம் என்பது தமிழ் மக்களுக்கு நிச்சயமான ஒரு தேவை. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திகள் முன்னெடுத்து செல்லப்படவேண்டும் என்பது ஒரு விடயம்.

அதேநேரம் நீண்டகாலமாக மக்கள் போராடி உயிர்த்தியாகம் செய்திருக்கின்றார்கள். அந்த உயிர்தியாகத்தின் முக்கிய நோக்கம் இந்த மண்ணில் தமிழ் மக்களினுடைய இருப்பு பாதுகாக்கப்படவேண்டும்,மொழி பாதுகாக்கப்படவேண்டும், கலாசாரம், பண்பாடுகள், நிலம் பாதுகாக்கப்படவேண்டும் அந்த தேவைகளுக்காகத்தான் இந்த நீண்ட போராட்டம் நடைபெற்றது. அந்தக் காரணங்களுக்காகத்தான் இந்த மண்ணில் பல இலட்சம் மக்கள் உயிர் நீத்திருக்கின்றார்கள். பல்லாயிரம்கோடி பெறுமதியான சொத்துக்களை நாம் இழந்திருக்கின்றோம். இதற்காக ஒரு தலை முறையே போராடி இருக்கின்றது.

அந்தவகையில் தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான தீர்வு என்பது முக்கியம். எதிர் காலத்தில் தங்களது தலைவிதியை தாங்களே தீர்மானிக்கக்கூடிய வகையில் தங்களது எதிர் காலத்தை தாங்களே திட்டமிடக்கூடிய வகையில் தங்கள் அபிவிருத்தி முயற்சிகளை தாங்களே ஏற்படுத்தக் கூடிய வகையில் அவர்களுக்கு அதிகாரங்கள் அவசியம்.

ஆகவே ஒரே நாட்டுக்குள் அவ்வாறான தொரு அதிகாரப் பகிர்வு என்பது முக்கியமானதொரு விடயம். ஆகவே அபிவிருத்தி,அரசியல்தீர்வு ஆகிய இரண்டு விடயங்களையும் எவ்வாறு சமாந்தரமாக கொண்டு செல்வது என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். இலங்கை தமிழர் பிரச் சினை தொடர்பாக கடந்த அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு விடயத்தை கூட சாதிக்க முடியவில்லை என்பதுதான் யதார்த்தம். இந்த நிலையில் தமிழ் தலைமைத்துவத்தில் மாற்றம் என்பது அவசியம். தமிழ் மக்களினுடைய தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்னெடுத்து செல்லக்கூடியவர்கள் அதற்கான காத்திரமான வழிமுறைகளை கண்டறிந்து செயற்படக் கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஆகவே அந்த மாற்றத்தை நோக்கி வருகின்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் யோசித்து வாக்களிக்கவேண்டும். ஒரு மாற்றத்தை நோக்கி நாங்கள் நடை போடவேண்டும் அந்தவகையில் நிச்சயமாக சரியானதொரு மாற்றத்திற்காக தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என மேலும் தெரிவித்தார். (9-299)

## பாலங்கள் புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் பழுதடைந்து காணப்படும் பாலங்கள் மற்றும் மதகுகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

முதல்கட்டமாக முல்லையடி வண்ணாங்கேணி இணைப்பு வீதி பாலம் புனரமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பாலங்களை புனரமைப்பது சம்பந்தமான விடயங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உபதவிசாளர் கயன்,உறுப்பினர்களான ரமேஷ், வீரவாகுதேவர், கோகுல்ராஜ் ஆகியோர் நேரடியாக சென்று நிலைமைகளை பார்வையிட்டனர். (9-315)

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு

(மன்னார்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹ்ஸனைஸ் நகர் கிராமத்தில் அமைந்துள்ள ஹ்ஸனைஸ் பாரூக் அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சி , காயா நகர், கரடிக்குளி, மறிச்சுக்கட்டி, காயாக்குலி, ஹ்ஸனைஸ் நகர் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட 44 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.றோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஹேயார் அமைப்பின் நிதி ஒதுக்கீட்டில் வை எம்.எம்.ஏ. முசலி தெற்கு அமைப்பின் அனுசரணையுடன் குறித்த பின்தங்கிய மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் ரோயல் கல்லூரியின் பழைய மாணவர்களும் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹ்ஸனைஸ் பாரூக், ஆகியோர் கலந்து கொண்டு துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைத்தனர். (9-285)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகரித்துள்ள

# சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்க இராணுவத்தின் உதவி பெற தீர்மானம்

(அக்கராயன்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் அதிகரித்துள்ள மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினரின் உதவியினை நாடுவது என புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் அதிகரித்துள்ள மணல் அகழ்வு காரணமாக பல குளங்கள் அழிவடைந்து செல்லும் அபாயம் காணப்படுகின்றது. குளங்களின் பின்பகுதியில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு காரணமாக குளங்கள் உடைப்பெடுக்கக்கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது எனவும் அத்துடன் கிராமங்களில் காடுகள் அழிக்கப்பட்டு பகல் வேளையிலும் டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுவதாகவும்,

மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு முயல்கின்ற கிராம உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு துணை போவதாகவும் பொது அமைப்புகளினால் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் தற்போது மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தை களத்தில் இறக்குவது எனவும் இராணுவத்தினருடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து பணியாற்றுவது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (9-350)

## கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நியமனம்

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராக, வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றிய கே.ஸ்ரீமோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளராகப் பணியாற்றிய நிலையில், இவர் வடக்கு மாகாண தொழில் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தற்போது, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (9)

# நந்திக்கடலில் நன்னீர் அதிகரிப்பால் இறால் பெருக்கத்தில் கடும் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு நந்திக்கடலில் நன்னீர் அதிகரித்திருப்பதன் காரணமாக இறால் பெருக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவின் முக்கிய குளமான முத்தையன்கட்டுக் குளத்தின் வான் வெள்ளம் ஏனைய சிறு குளங்களின் வெள்ளம் நந்திக் கடலினை நிரப்புகின்ற போது நந்திக் கடல், வட்டுவாகல் பகுதியில் கடற்றொழிலாளர்களினால் அணை வெட்டப்பட்டு நந்திக்கடலின் நீர் பெருங்கடலுடன் கலக்க விடப்படும்.

பெருங்கடல் அலை சீற்றம் ஏற்படும் போது நந்திக்கடல் பெருங் கடல் நீர் கலக்கும். ஆனால் இவ் வாண்டு பெருங்கடல் சீற்றம் எடுக் காததன் காரணமாக நந்திக் கடலில் நன்னீர் அதிகரித்துக் காணப் படுகின்றது.

இதன் காரணமாக இறால் பெருக்கம் குறைவடைந்துள்ளது. நன்னீர் அளவு அதிகரித்திருப்பதன் காரணமாக இறால் குஞ்சுகளின் உயிரிழப்புகளும் அதிகரித்துள் ளன. நந்திக் கடலில் நன்னீர் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. வயல் நிலங்களில் இருந்து இரசாயனம் கலந்த நீர் நந்திக் கடலுடன் கலக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாகவும் இறால் குஞ்சுப் பெருக்கம் குறை வடைந்து இருக்கலாம் எனவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக் கின்றனர். முல்லைத்தீவு பெருங் கடலின் அலை சீற்றம் ஏற்படாததன் காரணமாக முல்லைத்தீவு பெருங் கடலின் நீரினை இயந்திரங்களின் உதவியுடன் நந்திக்கடலுடன் கலப் பதன் காரணமாக நந்திக்கடலின் உவர்நீரத் தன்மையினை அதிக ரிக்கலாம் எனத் தெரிவிக்கும் கடற் றொழிலாளர்கள் முல்லை த்தீவு மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கடற்றொழி லாளர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (9-350)



சீரடி சாய் பாபாவின் ஆலயத்தின் 07 ஆம் ஆண்டு நினைவாக கிளிநொச்சியில் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் இயந்திரங்கள் மற்றும் பால்மாடுகள் என்பன கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி தருமபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள "நமசிவாயம் "மூதாளர் பேணலகத்தின் ஏற்பாட்டில் லண்டனில் வசிக்கும் மகாதேவன் சத்தியரூபனின் நிதிப்பங்களிப்புடன் குறித்த உதவிகள் வழங்கப்பட்டன.

(படம்- முரசுமோட்டை செய்தியாளர்)

# பாரதம்

## டில்லியில் அரச கட்டடத்தில் தீ



(டில்லி)

இந்தியாவின் டில்லியில் போக்குவரத்து அமைச்சு கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ விபத்தானது நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக உயிரிழப்புகள் எதுவும் இதுவரை ஏற்படாத நிலையில் தீயினைக் கட்டுப்படுத்த எட்டு தீயணைப்பு வாகனங்கள் பணிகளில் ஈடுபட்டன. (ஜ-2)

## பள்ளிவாசலுக்குள் இந்துத் திருமணம்



(ஆலப்புழா)

முஸ்லிம்களின் பள்ளிவாசலில் இந்து மத ஜோடிக்கு இந்து மத முறைப்படி திருமணம் நடைபெற்ற நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள சேரவல்லி பகுதியில் செயற்பட்டு வருகிறது சேரவல்லி முஸ்லிம் ஜமாத் கமிட்டி. சேரவல்லி ஜமாத்துக்கு கடந்த நவம்பரில் ஒரு இந்துப் பெண்ணிடம் இருந்து கடிதம் வந்துள்ளது.

அதில், கணவரை இழந்த "பிந்து" என்ற பெண் ஒருவர், தன் மகளுக்கு திருமணம் செய்து வைக்க உதவி தேவைப்படுவதாகவும் அதற்கு ஜமாத் கமிட்டி உதவவேண்டும்எனும்வேண்டுகோள் வைத்திருந்தார்.

இதனையடுத்து, பிந்துவின் மகள் அஞ்சுவுக்கு மசூதியிலேயே திருமணம் செய்து வைப்பது என முடிவு செய்யப்பட்டு, திருமணத்தை ஜனவரி 19 ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டது ஜமாத்.

திட்டமிட்டபடி அஞ்சுவுக்கும் சரத் சசி என்பவருக்கும் ஜமாத் கமிட்டியின் முன்னிலையில் நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றது.

பள்ளிவாசலில் நடைபெற்றாலும் இந்து முறைப்படியே இந்தத் திருமணம் நடைபெற்றுள்ளது. இதற்காக, பிந்துவின் மகள் அஞ்சுவுக்கு பத்து சவரன் தங்க நகை மற்றும் 2 இலட்சம் ரூபாய் பணம் பரிசாகக் கொடுத்து திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்துள்ளனர் இஸ்லாமியர்கள். (ஜ-2)

## ஐ.எஸ்.அமைப்பின் தலைவராகச் செயற்பட்ட 250 கிலோ எடையுடைய பயங்கரவாதி கைது

(பக்தாத்)

ஐ.எஸ்.அமைப்பின் முக்கிய தலைவராக செயற்பட்டு வந்த பயங்கரவாதியைக் கைது செய்த பொலிஸார் அவரைக் காரில் ஏற்றி செல்ல முடியாததால் சரக்கு வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

ஐ.எஸ்.பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வரும் நாடுகளில் ஒன்று ஈராக். அங்கு அவர்களை ஒடுக்குவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் அமெரிக்க படைகளும் அங்கு முகாமிட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஆனாலும் அங்கு பயங்கரவாதிகள் நடமாட்டம் குறைந்தபாடில்லை. அவர்கள் தொடர்ந்து அரசுக்கு எதிராக மிரட்டல்கள் விடுத்து வருகின்றனர். இந்த நிலையில் அங்கு ஐ.எஸ்.அமைப்பின் முக்கிய தலைவராக செயற்பட்டு வந்த அபு அப்துல் பாரி என்பவர், அடிக்கடி இதுபோன்ற மிரட்டல்களை விடுத்து வந்தார். அவரை ஈராக் பாதுகாப்பு படையை சேர்ந்த ஸ்வாட் குழு மொசூல் நகரில் சுற்றிவளைத்து கைது செய்தது.

சுமார் 250 கிலோ எடை கொண்ட அவரை காரில் ஏற்றி செல்ல முடியாததால், சரக்கு வாகனத்தில் பாதுகாப்புப் படையினர் அழைத்துச் சென்றனர்.

ஐ.எஸ்.அமைப்பினருக்கு ஆதரவாகச் செயற்படாத மதபோதகர்களை கொல்வதற்கான உத்தரவுகளையும் அபு அப்துல் பாரி பிறப்பித்துள்ளார் என ஈராக் பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஜ-2)

## லிபியாவில் நீண்டகாலமா

## முடிவுக்குக் கொண்டுவர சர்வ

(திரிபோலி)

எண்ணெய் வளம் நிறைந்த வட ஆபிரிக்க நாடான லிபியாவில், நீண்டகாலமாக நிலவி வரும் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஜேர்மன் தலைநகர் பெர்லினில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'லிபியாவில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான சர்வதேச மாநாட்டில், உலகத் தலைவர்கள் இதற்கான தீர்மானத்தை எடுத்தனர்.

இதற்கமைய ஐந்து மணி நேரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர், உள்நாட்டுச் சமர் நடைபெற்று வரும் லிபியாவில் போர் நிறுத்தத்தை நோக்கி செயற்பட அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டன.

லிபியாவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரச படையினருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி காலிஃபா ஹஃப்தாரின் படையினருக்கும்இடையே மோதல் முற்றி வருகிறது.

இதனால், ஐ.நாவின் அழைப்பை ஏற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், துருக்கி ஜனாதிபதி எர்டோகன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரான், ஜேர்மன் சான்ஸ்லர் ஏஞ்சலா மெர்கெல் உள்ளிட்ட தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஐ.நா.பொதுச் செயலர் அன்டோனியோ குட்டேரஸ் பங்கேற்ற இந்த மாநாட்டில், காலிஃபா ஹஃப்தார் படை, சர்வதேச அங்கீகாரம் பெற்ற பிரதமர் ஃபாயஸ் அல்-சராஜ் தலைமையிலான அரசு ஆகிய இரு தரப்பையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினர்.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சர்வதேச அமைதி மாநாட்டில் பங்கேற்பது கடந்த 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல் முறையாகும்.

லிபியாவை 40 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டு வந்த அல்-கடாஃபியின் ஆட்சியை, அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் உதவியுடன் கிளர்ச்சிப் படையினர் கடந்த 2011 ஆம் ஆண்டு கவிழ்த்தனர்.

எனினும், அதற்குப் பிறகு அந்த நாட்டில் பல்வேறு ஆயுதக் குழுக்களும் தங்களுக்குள் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன.

## முஷரப் சரணடை

## கோரிக்கை மீள் பரிசீ

## உச்ச நீதிமன்ற

(இஸ்லாமாபாத்)

சட்டத்தின் முன்பு சரண் அடைந்தால் மட்டுமே முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் பின் கோரிக்கையை பரிசீலிக்க முடியும் என பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை எதிர்த்து முஷராப் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பாகவே உச்ச நீதிமன்றம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பர்வேஸ் முஷராப் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக, 2007 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி அவசர நிலைப் பிரகடனம் செய்தார். மேலும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் அவர் சிறையில் அடைத்தார்.

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதை எதிர்த்து அவர் மீது 2013 ஆம் ஆண்டு டிசெம்பரில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக எனக்கூறி, பாகிஸ்தானிலிருந்து முஷராப் வெளியேறி டுபாய் சென்றார். பின்னர் அங்கேயே அவர் தங்கிவிட்டார்.

இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி தேசத்துரோக வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முஷராப்புக்கு சிறப்பு நீதிமன்றம் தூக்குத்தண்டனையை அறிவித்தது.

இதனை எதிர்த்து தொடுக்கப்பட்ட மறுசீராய்வு மனுவை விசாரித்த லாகூர் உயர் நீதிமன்றம் பர்வேஸ் முஷராப்புக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்து உத்தரவிட்டுள்ளது.

முஷராப் வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம், அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானது என்று லாகூர் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

ஆனால் அதேநேரத்தில் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டுத்தான் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டதாகவும் அந்த தீர்ப்பு செல்லுபடியாகும் என்றும் சில சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## மரண தண்டனைக்கு ஜப்பானில் 80 சதவீ

(டோக்கியோ)

ஜப்பானில் மரண தண்டனைக்கு 80 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்ததாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கடும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இந்நிலையில் ஜப்பான் நாட்டில் மரண தண்டனைக்கு எதிராக குரல் எழுந்தது. இதையடுத்து மரண தண்டனை தொடர்பாக மக்களிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது.

அதில், 80 சதவீத மக்கள் மரண தண்டனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக ஜப்பான் கடந்த சனிக்கிழமை அறிவித்தது.

அதன்படி, 9 சதவீத மக்கள் மட்டுமே மரண தண்டனை நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தனர். 80.8 சதவீத மக்கள் அதை தொடர வேண்டும் என்றே கூறியுள்ளனர்.

மரண தண்டனையை ஆதரிக்கும் 57 சதவீதத்தினர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உணர்ச்சிகளைக் குணப்படுத்த வேண்டியது அவசியம்

# வெளிநாடு

## ...மாக நிலவிவரும் மோதல்!

## ...ர்வதேச தலைவர்கள் இணக்கம்

...பை ஏற்று
...ர். துருக்கி
...னாதிபதி
...ன்ஸ்லர்
...லைவர்கள்
...னர்.
...ானியோ
...நாட்டில்
...ர்வதேச
...ஸ் அல்
...கிய இரு
...கலந்து
...னர்.
...தரப்பின
...ல் பங்கே
...குப் பிறகு
...க்கு மேல்
...ட்சியை.
...டைகளின்
...ர் கடந்த
...த நாட்டில்
...தங்களுக்
...கின்றனர்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பிரதமர் ஃபாயஸ் அல்-சராஜ் தலைமையிலான அரசுப் படையினருக்கும் முன்னாள் இராணுவ தளபதி காலிஃபா ஹஃப்தார் படையினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், துருக்கியைப் பூர்வீகமாகக் கொண்ட ஃபாயஸ் அல்-சராஜ் அரசுக்கு ஆதரவாக, லிபியாவுக்கு தங்கள் நாட்டுப் படையினரை அனுப்ப துருக்கி முடிவு செய்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஹஃப்தார் படையினர் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள துறைமுகங்களில் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளனர்.

இது ஹஃப்தார் மற்றும் அல்-சராஜ் படையினருக்கு இடையிலான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

கிழக்குத் தளபதி கலீஃபா ஹஃப்தார், ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றவர். ஆனால் கடந்த வாரம் மொஸ்கோவில் நடந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து வில்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# நியூயோர்க் நகரை பாதுகாக்க சுவர் எழுப்பும் திட்டம்

## ட்ரம்ப் கடும் எதிர்ப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரை புயல் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க சுவர் ஒன்றை எழுப்பும் திட்டத்திற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் நியூயோர்க் நகரை அடிக்கடி புயல் தாக்கி வருகின்றது. இதனால் இந்தப் பாதிப்புகளில் இருந்து அந்நகரை பாதுகாப்பதற்காக அமெரிக்க இராணுவப் பொறியாளர்கள் கடற்கரையில் இருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள நியூயோர்க் துறைமுகம் பகுதியில் பெரிய சுவர் ஒன்றை எழுப்ப முடிவு செய்துள்ளது.

இதற்கான திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட செயற்பாட்டிற்கு 11,900 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். இத்திட்டம் நிறைவடைய 25 ஆண்டுகள் ஆகும்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, 'புயல் தாக்குதல்களில் இருந்து நியூயோர்க் நகரை காப்பதற்காக அதனை சுற்றி 20 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பில் பெரிய அளவிலான சுவரை எழுப்புவது என்பது அதிக பொருட் செலவு ஏற்படுத்தும்.

அது முட்டாள்தனமானது. இந்தத் திட்டம் சுற்றுச்சூழலுக்கு எதிரானது. தேவையான பொழுது இந்தத் திட்டம் எந்த வகையிலும் பயனளிக்காது. இது காண்பதற்கு பயங்கர தோற்றமளிக்கும்' என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பொழுது, மெக்சிக்கோ நாட்டில் இருந்து சட்டவிரோத வகையிலான அகதிகள் குடியேற்றத்தினை தடுத்து நிறுத்துவதற்காக மெக்சிக்கோ எல்லையை ஒட்டிய பகுதியில் மிகப் பெரிய சுவர் எழுப்பப்படும் என ட்ரம்ப் உறுதி கூறினார்.

எனினும், இந்தத் திட்டம் கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆகிய ஆண்டுகளில் நிதி நிலையில் நெருக்கடி ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக சுவர் எழுப்புவதற்கு போதிய பணம் ட்ரம்புக்கு கிடைக்கப் பெறவில்லை. இதனால் 550 மைல்கள் நீளம் கொண்ட முழுச் சுவரும் 2020 ஆம் ஆண்டு தேர்தலின் பொழுது கட்டப்படும் என ட்ரம்ப் உறுதியளித்துள்ளார். அதே நேரத்தில் இந்த விவகாரத்தில் இறுதி முடிவை அமெரிக்க நாடாளுமன்றம்தான் எடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...டைந்தால் மட்டுமே ...ரிசீலனை செய்யப்படும்

## ...ன்றம் அறிவிப்பு

...த வழக்கு
...016 ஆம்
...சிகிச்சை
...தானிலிரு
...சென்றார்.
...விட்டார்.
...பர் மாதம்
...வழக்கில்
...முஷராப்பு
...த்தண்ட
...பட்ட மறு
...கூர் உயர்
...த விதிக்கப்
...இரத்துச்
...அமைக்
...யலமைப்
...து என்று
...ள்ளது.
...ட்டத்தின்
...ப்பு நீதிம
...ந்த தீர்ப்பு
...ட நிபுணர்

முஷராப் சார்பில் அவரது சட்டத்தரணி மனுவைத் தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

இந்த விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி முஷராப் முதலில் சட்டத்தின் முன்பு சரணடைய வேண்டும் எனவும் அதன் பிறகுதான் அவர் மேன்முறையீடு செய்ய முயல வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது எனவும் மேலும் நீதிமன்றம் தெரிவித்துள்ளபடி ஒரு மாதத்தில் நீதிமன்றத்தில் அவர் சரணடைய வேண்டும் என்றும் இல்லாவிட்டால் மேன்முறையீடு செய்யும் உரிமையை அவர் இழந்துவிடுவார் என உச்ச நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (2)

# ட்ரம்பிற்கு எதிரான குற்றப் பிரேரணை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்

## சட்டத்தரணிகள் குழு சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு எதிரான குற்றப் பிரேரணை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என சட்டத் தரணிகள் குழு அறிவித்துள்ளது.

மேலும் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களால் ஜனாதிபதியினால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு குற்றத்தையும் நிரூபிக்க முடியாது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமையினாலேயே அவருக்கு எதிராக இந்த குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, உக்ரேய்னின் உதவியை நாடியதாக ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், அவரைப் பதவி நீக்குவதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்நிலையில் இதற்கான விசாரணை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இராணுவ முகாம் மீது தாக்குதல் உயிரிழப்பு 80 ஆக அதிகரிப்பு



(ம்ரிபி)

ஏமனில் இராணுவ முகாம் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

ஏமன் நாட்டில் ஜனாதிபதி அப்துரப்பா மன்சூர் ஹாதி படையினருக்கும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்த உள்நாட்டுப் போர் இன்னும் நீடித்து வருகிறது.

இந்நிலையில், ஏமன் நகரமான மரிபில் ஒரு இராணுவப் பயிற்சி முகாம் மீது ஈரானுடன் இணைந்த ஹவுதிகள் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 60 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் ஆரம்பத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. (ஜ-2)

# ...வீத மக்கள் ஆதரவு

...ம் என்றே
...ிக்கும் 57
...ள் மற்றும்
...ணர்ச்சிக
...அவசியம்

அதற்காக மரண தண்டனை விதிக்கப்படுவது சரியே என்று பதிலளித்துள்ளனர். 54 சதவீதத்தினர் மரண தண்டனையை சில வகையான குற்றங்களுக்கு பதிலடி என்று கூறியுள்ளனர்.

மேலும் பதிலளித்தவர்களில் 58 சதவீதத்துக்கும் அதிகமானோர் மரண தண்டனையை ஒழிப்பதால், கடுமையான குற்றங்கள் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர். (ஜ-2)

# தொழிலாளர் தேசிய சங்கமெனும் குடும்பம் ஒருபோதும் பிளவுபடாது

## திகாம்பரம் திட்டவட்டம்

(அட்டன்)

தொழிலாளர் தேசிய சங்கம் என்பது பல அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் போன்றது. அதன் ஒற்றுமையைக் கட்டிக் காக்க வேணடியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

அதே ஒற்றுமையுடன் எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ள நாம் தயாராக வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றின் தைப்பொங்கல் விழாவுடன் கூடிய மகளிர் அணி மற்றும் முழுநேர உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் நேற்று முன்தினம் அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவத்தின் "தொழிலாளர் பொழில்" கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான சோ. ஸ்ரீதரன், சரஸ்வதி சிவகுரு, எம். உதயகுமார் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் மேலும் உரையாற்றுகையில்,

இன்னும் ஒன்றரை மாத காலத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவுள்ளது. இது முக்கியமான ஒரு தேர்தலாகும். நாம் கடந்த காலங்களில் மலையக மக்களுக்காக எத்தனையோ வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளோம்.

அவற்றில் பிரதானமானது எமது மக்களுக்கான தனி வீட்டுத் திட்டமாகும். தலா ஏழு பேர்ச் காணியில் தனி வீடுகளை அமைத்துக் கொடுத்து அவற்றுக்கான காணி உறுதிப்பத்திரங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

இந்திய அரசாங்கம் வழங்கிய நான்காயிரம் வீடுகளைக் கட்டி முடித்துள்ளதோடு, மேலும் பத்தாயிரம் வீடுகளை அமைப்பதற்கான காணியும் இனங் காணப்பட்டுள்ளது. பயனாளிகளின் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாம் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்த நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது புதிய பாராளுமன்றத் தேர்தலுக்கு நாம் முகங்கொடுக்கத் தயாராகி வருகின்றோம்.

எமது அங்கத்தவர்களை பிரித்தெடுக்கவும் எமது மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்கும் பலர் பல்வேறு விதமான சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த விடயத்தில் எமது மக்கள் ஏமாற்றமடைந்து விடக் கூடாது.

தொழிலாளர் தேசிய சங்கம் என்பது ஒரு கூட்டுக் குடும்பம் போன்றது. இதில் கருத்து முரண்பாடுகள் இருப்பது சகஜமான விடயம் தான் என்றாலும், எமது பலத்தையும் ஒற்றுமையையும் நாம் கட்டிக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை இன்று அரசியல் அந்தஸ்தோடு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த பெருமை தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கின்றது. அவர்களை நாம் மதிக்க வேண்டும். அவர்களுக்கான பணிகளை செய்வதற்கு எம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

எம்மிடம் காணப்படும் குறைகளை மனம் விட்டுப் பேசி எம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். நான் உயிரோடு இருக்கும் வரை இந்தச் சங்கத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்க இடம் கொடுக்க மாட்டேன். மேலும் எந்த வகையிலும் எமது கட்சி சோரம் போக இடங்கொடுக்கவும் மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தோட்டங்களை கையகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் இடித்துரைப்பு

(அக்கரப்பத்தனை)

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள பரந்துபட்ட கூட்டணியிலேயே பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிடும் என்றும் வடக்கில் உதயமாகியுள்ள தமிழ்த் தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாரில்லை என்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஆயிரம் ரூபாய் என்பது கடந்த 5 ஆண்டுகளாக கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு வந்தாலும் அத்தொகை இன்னும் வழங்கப்படவில்லை.

இன்று பொருட்கள், சேவைகளின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. இந்நிலையில் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டால் அது வரவேற்கப்படக்கூடிய விடயமாகும்.

குறிப்பாக ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி விட்டதாகவும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இது வரவேற்கக்கூடிய விடயம். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எந்தவித அரசியல், கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் சில பெருந்தோட்டங்கள் இருக்கின்றன. அவை எந்த நிலைமையில் உள்ளன? இந் நிலையில் தனியார் வசமுள்ள தோட்டங்களையும் கையகப்படுத்தினால் அவற்றை முறையாக நிர்வகிக்க முடியுமா? என சிந்தித்தே இது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எடுக்க வேண்டும்.

### சிவாஜிலிங்கத்தின் அழைப்பு ஏற்கப்படுமா?

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் - அதாவது சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாகும் கூட்டணியில் போட்டியிடுவோம் என உறுதியளித்துள்ளோம். எனவே, எம்.கே. சிவாஜிலிங்கம் அங்கம் வகிக்கும் கட்சியுடன் இணைந்து செயற்படமாட்டோம்.

மலையகத்தில் போட்டியிட மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏனைய தமிழ்க்கட்சிகள் வருவதை ஏற்க மாட்டோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உண்மை எது? பொய் எது?

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடப் போவார். சில நண்பர்களையும் கூட அழைத்துக் கொண்டு போவார். காட்டுக்குப் போனதும் ஆளுக்கு ஒரு பக்கமாகச் சென்று வேட்டையாடுவார்கள். மாலை நேரம் திரும்பி வருவார்கள். மறுநாள் அரண்மனையிலே உட்கார்ந்து ஒவ்வொருவர் அனுபவங்களையும் சொல்லிக் கொள்வார்கள். அவரவர் வீரத்திற்கு தகுந்த பரிசை ராஜா கொடுப்பார். இது மாதிரி எல்லோரும் வேட்டைக்குப் போய்விட்டு திரும்பி வந்ததும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். ஒருவன் தன்னுடைய வீர தீரச்செயலை பற்றிப் பேச ஆரம்பித்தான். அரசே நேற்றைக்குக் காட்டிலே என்ன ஆகிவிட்டது தெரியுமா? எனக்கு நேராக ஒரு சிங்கம் வாயைத் திறந்து கொண்டு வந்துவிட்டது. நான் பயப்படவில்லை. உடனே ஒரு கல்லை எடுத்துக் குறி பார்த்து வீசினேன். சிங்கத்தின் வாய்க் குள்ளே போய் அந்தக் கல்லு மாட்டிக் கொண்டது. அவ்வளவுதான்...அந்த சிங்கம் என்னைப் பார்த்துப் பயந்துகொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போய்விட்டது என்றான்.

ஆகா பலே என்று எல்லோரும் கைதட்டினார்கள். இரண்டாவது ஆள் ஆரம்பித்தான். அரசே...நான் போன வழியிலே இரண்டு பெரிய மலைப்பாம்புகள் கிடந்தன. என்னை முழுங்கிறதுக்கு வந்தன. நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்த இரண்டு மலைப் பாம்புகளுடைய வாலையும் ஒன்றாகச் சேர்த்து முடிச்சுப் போட்டு விட்டேன். அவ்வளவுதான். அது அங்கே இழுக்க... இது இங்கே இழுக்க முடிச்சு நல்லா இறுக்கிப் போய்விட்டது என்றான். அற்புதம் என்று சொல்லி எல்லோரும் கை தட்டினார்கள். அடுத்த படியாக மூன்றாவது ஆள் சொல்ல ஆரம்பித்தான். அரசே நான் போன பாதையிலே குறுக்கே ஒரு ஆறு ! அதிலே இறங்கிக் குளித்தேன். யாரோ காலைப் பிடித்து இழுக்கிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தால் ஒரு முதலை! நான் உடனே ஒரு ஜம்ப் பண்ணி அது முதுகிலே போய் உட்கார்ந்து கொண்டேன். கரைக்கு நீந்த வைத்தேன். கரை வந்ததும் குதித்து வந்துவிட்டேன் என்றான்.

அடடா! எப்பேர்ப்பட்ட வீரம் என்று கைதட்டினார்கள். நான்காவது ஆள் எழுந்திருந்தான்.

மன்னா நான் போன இடத்திலே ஒரு கரடி என்னைத் துரத்துவதற்கு ஆரம்பித்தது. நான் ஒரு மலை உச்சிக்கு வந்து விட்டேன். அதன் பின்பு ஒரு அடி எடுத்து வைத்தாலும் அதள பாதாளத்திலே விழ வேண்டியதுதான். அந்த நேரம் பார்த்து ஒரு இராட்சசக் கழுகு அந்தப் பக்கமாகப் பறந்து வந்தது. உடனே நான் உயரே எழும்பி அது காலைப் பிடித்துக் கொண்டேன். தொங்கிக் கொண்டே வந்தேன். ஒரு நல்ல இடம் வந்ததும் தொப்பு என்று குதித்து நடந்து வந்து விட்டேன் என்றான். இதுக்கு எல்லோரும் கை தட்டினார்கள். கடைசியாக ஒருவன் எழுந்திருந்தான்.

அரசே! நான் போன வழியில் ஒரு பெரிய யானை குறுக்கே வந்தது. பயங்கரமாகச் சத்தம் போட்டுக் கொண்டே வந்தது. நான் பயந்து ஓடவில்லை! உடனே என்ன செய்தேன் தெரியுமா? அது வாலைப் பிடித்துத் தூக்கினேன். தலைக்கு மேலே தூக்கி கரகர என்று சுத்தி வேகமாக எறிந்தேன். அவ்வளவுதான். அந்த வேகத்திலேயே யானை மேலே போக ஆரம்பித்ததுதான்...இன்னும் கூட அது போய்க் கொண்டுதான் இருக்கிறது. கீழே விழவில்லை என்றான். இதைக் கேட்டதும் ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. என்னை என்ன முட்டாள் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறீர்களா? யானையை நீ வாலைப் பிடித்துத் தூக்கினாய்... அதை நான் நம்ப வேண்டுமா? என்றார். உடனே இவன் பணிவாகப் பதில் சொன்னான்.

அரசே...ஒரு சிங்கத்து வாயிலே கல் மாட்டிக் கொண்டதையும் மலைப் பாம்பு வாலைப் பிடித்து முடிச்சுப் போட்டதையும் முதலை முதுகிலே சவாரி செய்ததையும் கழுகு காலைப் பிடித்துக் கொண்டு பறந்ததையும் நம்புகிறபோது நான் சொன்னால் மட்டும் நம்பக் கூடாதா? என்று கேட்டான்.

பொய் சொன்னவர்கள் எல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். ராஜா அவர்களைப் பார்த்துச் சொன்னார்.

நீங்கள் எல்லோருமே என்னை முட்டாளாக்கியிருக்கிறீர்கள். கடைசியாகப் பேசிய இவன்தான் எனக்கு உண்மை எது? பொய் எது என்பதைப் புரிய வைத்தான். இவன் தான் உண்மையான தைரியசாலி! என்று சொல்ல அவனுக்கே பரிசையும் கொடுத்துப் பாராட்டினார்.

உண்மையை நிலைநாட்டுகிறவன் தான் உண்மையான வீரன் என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலத்திலே எல்லாம் பொய் சொன்னால் தான் பிழைக்க முடியும் என்பது சில பேரின் நம்பிக்கை.

ஒரு அப்பாவுக்கு...தன் மகனுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லை என்ற கவலை. பொய் சொன்னால் தான் இந்த உலகத்திலே பிழைக்கலாம். ஆனால் அவனுக்கு அது தெரியவில்லை. அதனால் இவனை அழைத்துக் கொண்டு போய் நடுக்கடலிலே விட்டுவிட்டு வந்துவிடலாம் என்று அழைத்துக் கொண்டு புறப்பட்டார். கடற்கரைக்குப் போனார். மகனுக்குச் சந்தேகம். எங்கே அப்பா என்னை அழைத்துக் கொண்டு போகின்றாய்? என்று கேட்டான். கடலிலே மீன் பிடிக்க உனக்குக் கற்றுக் கொடுக்கப் போகிறேன் என்றார். நான் ஏற்கனவே மீன் பிடித்துவிட்டேன் என்றான் மகன். எங்கே அது? என்று கேட்டார் அப்பா. சுட்டுச் சாப்பிட்டு விட்டேன் என்றான் பிள்ளை. அப்பா பார்த்தார் சரி நம்ம பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்று சொல்லி திருப்பி அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

# இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்தாவிட்டால் இனத்தின் அடையாளங்களை இழந்துவிடுவோம்

## வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

**(சாவகச்சேரி)**

**எமது காலத்தில் எமது பெற்றோருக்கு எந்தவொரு அரச உத்தியோகத்தரின் ஆலோசனையும் கிடைக்கவில்லை. ஆனால் நாம் வழி தவறிப் போகவில்லை, இன்றைய இளைய சமுதாயத்தை நெறிப்படுத்தி நல்வழிப்படுத்தாவிட்டால் எமது இனத்தின் அடையாளங்களை இழந்து போவோம் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சியில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கலைகளை மட்டும் வளர்த்தால் போதாது. கலாசார நிகழ்வுகளை மாத்திரம் நடத்தினால் போதாது. இன்று வடமாகாணத்தில் நடந்து கொண்டிருக்கின்ற பல அசம்பாவிதங்கள், பல நிகழ்வுகள் மனதை அதிரவைக்கின்றன. வாழ வேண்டிய சமுதாயம், வாழ வைக்க வேண்டிய இந்த சமுதாயம் தடுமாறிச் செல்கின்றதோ என்ற அச்சம் எழுகின்றது. அண்மையில் எனது அலுவலகத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட அதிகாரி ஒருவர் சிறுவர்களைப் பாதுகாப்பது பற்றியும் அவர்களுக்கு மனவள ஆலோசனை வழங்குவது பற்றியும் நன்னடத்தை உள்ளவர்களாக மாற்றுவது பற்றியும் பல வேறு ஆலோசனைகளை முன்வைத்தார்கள். அரசாங்கம் சிறுவர்களின் நலனுக்காக பெருமளவான திணைக்களங்களை உருவாக்கி கணக்கற்ற உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. இவ்வாறான திணைக்களங்கள் உள்ள இக் காலகட்டத்தில், 15 பொதுமக்களுக்கு ஒரு அரச உத்தியோகத்தர் உள்ள நவீன காலத்தில் தான் இத்தனை அசம்பாவிதங்களும் இலங்கை முழுவதும் குறிப்பாக வடக்கில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. என்னை எனது பெற்றோர்கள் வளர்க்கும் போது எந்த அரச உத்தியோகத்தரும் எனது பெற்றோருக்கு ஆலோசனை வழங்கவில்லை. ஆனால் அன்று வழி தவறிப் போனவர்கள் மிகமிகக் குறைவு. ஆனால் இன்று கல்வி அறிவு உள்ள இவ் உலகில், பெருந் தொகை அரச உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ள ஒரு இடத்தில் இந்தப் பிள்ளைகள் ஏன் தடுமாறிச் செல்கின்றனர்?

பெற்றோர் ஆகிய எங்களுக்கு ஒரு கடமை உள்ளது. பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டிய, வழிப்படுத்த வேண்டிய, நல்வழிப்படுத்த வேண்டிய, கண் காணிக்க வேண்டிய ஒரு கடமை பெற்றோருக்கு குறிப்பாக தாய் மாருக்கு உள்ளது. இதை நாம் செய்யாமல் விட்டுவிட்டு பிறர் மீது குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை.

பிள்ளைகளின் பிரச்சினைகளுக்காக பொலிஸ், நீதிமன்றம் மற்றும் சட்டத்தரணிகளை நாடுவது இந்த வடமாகாணத்திற்கு தேவைதானா?

குடும்ப வாழ்க்கை என்றால் என்ன என்பதனை ஐரோப்பிய நாடுகளில் குடியேறியுள்ள எம் மக்கள் அந்த நாட்டு மக்களுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு குடும்பம் என்றால் என்ன, பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று சொல்லிக்கொடுக்கின்றோம். எமது இளம் தலைமுறை அந்த நாடுகளில் சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு எமது இளைய சமுதாயம் எங்கே போகிறது என்று எங்களை நாமே கேட்க வேண்டியதாக உள்ளது. பொங்கல் பானையில் அரிசி பொங்கினால் மட்டும் எமது மனங்கள் பொங்கி விடாது. எமது மனம் பொங்க வேண்டுமானால் எமது பிள்ளைகள் ஒழுக்கமுள்ளவர்களாக, கண்ணியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பிள்ளைகளை வழிநடத்த வேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள சகலரது கைகளிலும் உள்ளது. ஆயுதத்தைக் காட்டி, பொலிஸைக் காட்டி, நீதிமன்றத்தைக் காட்டி இளம் சமுதாயத்தை அடக்க முடியாது. சமூகம் தான் இவர்களை வழிநடத்த வேண்டும்.

சமூகம் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் ஒரு காலத்தில் நாம் பெருமையாகக் கூறிக்கொண்ட எங்கள் இனத்தின் அத்தனை அடையாளங்களையும் இழந்து போவோம். கலாசாரம் என்பதும் பண்பாடு என்பதும் இந்த மாகாணத்தை மட்டுமல்ல இந்த இனத்தை விட்டே போய்விடும் என்ற அச்சம் எனக்குள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.நிருபராணி கலந்து கொள்வார். (இ-5)

## நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு-பதுளை வீதியை அண்டியுள்ள வடிச்சல் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தபோது சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பொழுது போக்கிற்காகவும் கிராமத்தில் சமைத்து உண்பதற்காகவும் உறவினர்களுடன் வடிச்சல் குளத்திற்குச் சென்ற இந்தச்சிறுவன் நண்பர்களுடன் சேர்ந்து நீராடியுள்ளான்.

அப்பொழுது திடீரென குளத்தின் சேறும் சகதியுமான ஆழப் பகுதியில் மூழ்கியே உயிரிழந்தார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றாய்வுப் பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஜ)

## செயற்பட்டு மகிழ்வோம் நாளை

(யாழ்ப்பாணம்)

நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி வ.கபிரியேல் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராக வரணி இயற்றாலை கிராம உத்தியோகத்தர் இ.சங்கீதா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## கணனி, உயர்தர டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு

(ஹோமாகம)

2020 ஆம் ஆண்டில் 1,000 மாணவர்களுக்கு கணனி டிப்ளோமா அல்லது உயர்தர டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர் கல்வி, அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஹோமாகம தியகமவில் அமைந்துள்ள தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் அமைச்சர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, அங்கு கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

வார இறுதி நாட்களில் இந்த டிப்ளோமா பாடநெறியை கற்பதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என்றும் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## புகையிரதத்துடன் பேருந்து மோதல் சாரதி படுகாயம்

(அம்பலாங்கொட)

அம்பலாங்கொட, வெனமுல்ல புகையிரதக் கடவையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சொகுசு பேருந்து ஒன்று றுகுணு குமாரி புகையிரதத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த பேருந்துச் சாரதி பலபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த புகையிரதக் கடவையில் பாதுகாப்பு வாயில் இல்லை எனவும் அங்கு சமிக்ஞை விளக்குகள் மாத்திரமே காணப்படுவதாகவும் விபத்தால் வெனமுல்ல

பகுதிக்கான போக்குவரத்து தடைப்பட்டது.

விபத்துத் தொடர்பில் அம்பலாங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# இராணுவத்தால் மிருசுவிலில் எண்மர் படுகொலை!
# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஜனாதிபதி உதவ வேண்டும்

## உறவினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

2000 ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் வைத்து எண்மர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஜனாதிபதி உதவ முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரி சுனில் ரட்ணாயக்க 17 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தமை எமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்து வரும் நிலையில் எமக்கு எந்தவிதமான இழப்பீடுகளையும் வழங்காமல் கொலையாளியை விடுதலை செய்தமை ஏற்க முடியாத செயலாகும்.

எனவே ஜனாதிபதி என்ற வகையில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் கரிசனை கொண்டு எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி செய்ய வேண்டுமென பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-114)

---

இவ்வாண்டு கொழும்புக் கம்பன் கழகத்தின்

## வெள்ளிவிழா

### ஜன.31, பெப்.1,2,3,4ஆம் திகதிகளில்

(கொழும்பு)

அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாக கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குப் பெருவிழா எடுத்து வருகிறது. அவ்வகையில் கொழும்புக் கம்பன் கழகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான கொழும்புக்கம்பன்விழா, எதிர்வரும் 31வெள்ளி மாலை முதல், பெப்ரவரி 1,2,3,4 சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் காலை, மாலை நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டுடன் கொழும்பில் கம்பன்கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறுகின்றன. அதனையொட்டி இவ்வாண்டுக் கம்பன்விழா கொழும்புக் கம்பன் கழகத்தின் வெள்ளிவிழாவாக மலரவுள்ளது.

வழமை போலவே இவ்வாண்டும் நம்நாட்டு, தமிழ் நாட்டு, பிறநாட்டு அறிஞர்கள் பலர் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் நாட்டிய அரங்கம், சுழலும் சொற்போர், வழக்காடுமன்றம், கவிநய அரங்கம், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், கவியரங்கம், இலக்கிய ஆணைக்குழு, கருத்தரங்கம், நாட்டிய நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. வழமை போலவே இவ்வாண்டும் நூல் வெளியீடு, இறுவெட்டுவெளியீடு ஆகியவற்றோடு விழாவின் முதல் நாளில் 'நாவலர்விருது', 'விபுலானந்தர்விருது', 'மகரந்தச் சிறகு விருது', 'நுழைபுல ஆய்வு விருது', 'ஏற்றமிகு இளைஞர் விருது' முதலிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

விழாவின் நிறைவுநாளான 4 ஆம் திகதி மாலை நம் நாட்டைச் சேர்ந்த ஆறு துறைசார்ந்த அறிஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளதோடு வழமைபோலவே உலகளாவி தமிழ்ப்பணி செய்த ஒருவருக்கான கம்பன்புகழ் விருதும் வழங்கப்படவுள்ளது. விழாநாட்களில் மண்டப வாயிலில் புத்தகக் கண்காட்சியும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வழமை போலவே அமரர் துரை விஸ்வநாதன் நினைவுப் பேச்சுப்போட்டி, அமரர் பொன் பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி என்பவற்றோடு, நாவலர் நற்பணி மன்றம் அமைத்துள்ள அறக்கட்டளை ஆதரவில் இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகர் ஞாபகார்த்த திருக்குறள் மனனப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்க்கான பரிசளிப்புகளும், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களின் ஏற்பாட்டில் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய இலக்கிய பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இவ்விழாவில் நடைபெறும்.

மேலும் இவ்வாண்டு சமூக சேவை செய்யும் நிறுவனங்களுக்கான நிதியுதவியும் கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்கான நிதியுதவிகளும் கழகத்தின் சார்பில் வழங்கப்படவுள்ளன.

இவ்விழாவில்மாணவர்களைக் கலந்து கொள்ள வைக்க விரும்பும் கல்லூரிகள் 077 293 5509 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு கல்லூரியின் பெயர், கலந்து கொள்ள விரும்பும் மாணவர்களின் வகுப்பு, மாணவர்களின் தொகை என்பவை பற்றி அறியத்தரும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

கலந்து கொள்ள அங்கீகரிக்கப்படும் மாணவர்களுக்கு விழா மண்டபத்தில் இட ஒழுங்கும், உணவு ஒழுங்கும் செய்து தரப்படும். விழாவில் கலந்து கொள்ள விரும்பும் தனியாரும் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் இவ்வசதிகள் செய்து தரப்படும்.

கம்பன்விழாவில் அனைத்துத் தமிழ் ரசிகர்களும் கலந்து சிறப்பிக்க வேண்டுமென கம்பன் கழகம் வேண்டிக்கொள்கிறது. (இ-7)

---

## புதிய இராஜதந்திரிகள் ஐவர் நேற்று நற்சான்றுப்பத்திரங்களை கையளிப்பு

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான தூதுவர்கள் நால்வரும் உயர்ஸ்தானிகர் ஒருவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர்.

கட்டார், துருக்கி, லக்ஸம்பேர்க் மற்றும் ஸ்லோவேனியா நாடுகளின் புதிய தூதுவர்கள் மற்றும் பாகிஸ்தான் நாட்டின் உயர்ஸ்தானிகர் ஆகியோர் இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கும் இந்த நாடுகளுக்கும் இடையே கல்வி, அபிவிருத்தி, தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் காணப்படும் தொடர்புகளை மேலும் உறுதிப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி இதன்போது புதிய இராஜதந்திரிகளுக்கு சுட்டிக் காட்டினார்.

இலங்கையுடனான தமது நாடுகளின் நீண்டகால தொடர்புகளை புதிய துறைகளின் ஊடாக மென்மேலும் விருத்தி செய்வதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என புதிய இராஜதந்திரிகள் உறுதியளித்தனர்.

நற்சான்றுப் பத்திரங்களை கையளித்த இராஜதந்திரிகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

01. ஜாஸ்ஸிம் பின் ஜாபிர் ஜாஸ்ஸிம் சரூர்-கட்டார் நாட்டின் தூதுவர்

02. ரகிபே டிமெட் செகெர்சியோக்ளு-துருக்கி குடியரசின் தூதுவர்

03. ஜீன் க்ளோட் குகேனர்-லக்ஸம்பேர்க் நாட்டின் தூதுவர்

04. கலாநிதி மர்ஜன் சென்சென்-ஸ்லோவேனியா குடியரசின் தூதுவர்

05. ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மொஹமட் சாத் கடாக்- பாகிஸ்தான் குடியரசின் உயர்ஸ்தானிகர். (இ-7)

---

## விலைச்சூத்திரத்தை அமுல்படுத்தியிருந்தால் எரிபொருளின் விலை அதிகரித்திருக்கும்

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் அமுல்படுத்திய எரிபொருள் விலைச் சூத்திரத்தை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்திருந்தால், ஒரு லீற்றர் எரிபொருளின் விலை இப்போது 10 முதல் 15 ரூபாய் வரை அதிகரித்திருக்கும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை - அகுனுகொலபெலஸ்ஸ பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து விலைச் சூத்திரத்தை நீக்க தற்போதைய அரசாங்கம் முடிவு செய்தமையால் இதுபோன்ற இக்கட்டான நிலை தவிர்க்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

தற்போது இலங்கையில் 20 நாட்களுக்கான தேவையை பூர்த்தி செய்யக்கூடிய எரிபொருள் இருப்பு உள்ளது என்றும் மேலும் 35,000 மெற்றிக் தொன் எரிபொருள் கொண்ட ஒரு கப்பல் இந்த மாத இறுதியில் நாட்டை வந்தடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்தால் சிங்கப்பூர் அல்லது மலேசியாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மேலும் எரிபொருள் விலையின் அதிகரிப்புக்கு மாற்றீடாக வும்பொதுமக்கள்மீதான சுமையை குறைக்கும் நோக்கிலும் வரிச் சுமையை நீக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் பயணிகள் வருவதை சோதனையிட கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) கருத்துப்படி, எந்தவொரு பயணக் கட்டுப்பாடுகளையும் இலங்கை அமுல்படுத்த வேண்டிய தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை கொரோனா வைரஸ் உள்ளிட்ட அனைத்து வகையான தொற்று வான்வழி பரவும் நோய்களையும் தடுக்க சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை பொதுமக்களுக்கு தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதாத் சமரவீரா அறிவுறுத்தினார்.

மேலும் சீனாவுக்கு செல்வோர் முகமூடி அணியுமாறும் முடிந்தவரை நெரிசலான பொது இடங்களைத் தவிர்க்குமாறும் சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் கைக்குழந்தைகள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டோர் முடிந்தவரை நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

கைகளை அடிக்கடி சவர்க்காரத்துடன் கழுவ வேண்டும். முகத்தைத் தொடுவதைத் தவிர்ப்பது தொற்றுநோயியல் பிரிவு வழங்கிய மற்றொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவில் பரவும் இனம் காணப்படாத வைரஸ் நோயின் காரணமாகவே இந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய கொரோனா என்ற வைரஸ் என சந்தேகிக்கப்படும் வைரஸ் ஒன்று சீனாவில் பரவியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரிகளால் இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். சுகாதார அமைச்சு இது தொடர்பாக தெரிவிக்கையில், இந்த நிலைமை குறித்து உலக சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கவனம் செலுத்து மாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக கூடுதல் கவனத்துடன் செயற்படுவதாகவும், இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்த வைரஸ் சீனாவில் உஹான் மாநிலத்தில் பரவியுள்ளது. சீனாவிற்கு விஜயத்தை மேற்கொள்வோர் அவதானத்துடன் செயற்படுமாறும், அமெரிக்காவும் நேற்று முன்தினம் தமது பிரஜைகளுக்கு அறிவித்துள்ளது. (இ-7)

# மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஓடக்கரை வழிகாட்ட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும் சிறந்த வழிகாட்டியாகவும் "ஓடக்கரை" மாதாந்த சஞ்சிகை விளங்க வேண்டும் என்று கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.

மீன்பிடித் தொழிலாளர்கள் தொடர்பான செய்திகளை வெளிக்கொண்டு வரும் நோக்கில் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சின் அனுசரணையுடன் "ஓடக்கரை" எனும் மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு நேற்று லேக் ஹவுஸ் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு முதல் பிரதியை வெளியிட்டு வைத்து உரையாற்றிய அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதன் மூலம் அவற்றை வெளியுலகிற்கு தெரியப்படுத்தி அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, நவீன தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை எமது மீன்பிடித் தொழிலாளர்களும் அறிந்து கொள்ளும் வகையிலும் ஓடக்கரை என்ற இந்த சஞ்சிகையின் வெளியீடுகள் அமைய வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்தார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் பாரிய நம்பிக்கையுடன் தன்னிடம் வழங்கியிருக்கின்ற கடற்றொழில் அமைச்சினூடாக மீன்பிடித் தொழிலாளர்களினதும் அவர்கள் சார்ந்த மக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் மீன்பித் தொழிலாளர்களுக்கு விசாலமான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல் வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மீன்பிடி முறைகளை ஒத்த நவீன முறைகளை நமது மீனவர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த முயற்சி வெற்றியடைய ஓடக்கரை என்ற சஞ்சிகையின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிவனொளிபாதமலைக்கு சென்ற பெண் மாரடைப்பால் மரணம்!

(ஹற்றன்)

சிவனொளிபாதமலைக்கு தனது குடும்பத்துடன் தரிசிக்கச் சென்ற பெண் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு உயிரிழந்தவர் களுத்துறை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய கருணாவதி என்பவர் எனவும் இவர் சிவனொளிபாதமலையை தரிசித்து கீழ் இறங்கும் போது மாரடைப்பு காரணமாக நல்லதண்ணி நகரில் இருந்து அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை வழங்கிய போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# தொழில் வாய்ப்பு திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கெடிகாமம்)

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தை பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக வறுமை இல்லாத இலங்கையை உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடையும் நோக்கத்துடன் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத்திலும் பார்க்க குறைந்த கல்வித் தரத்தைக் கொண்டவர்களுக்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திணைக்களத்தின் மூலம் தொழில்வாய்ப்பைப் பெறவுள்ளோருக்கு 6 மாத தொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களை அடுத்த மாதம் 2020.02.15 ஆம் திகதிக்கு முன்னர் பயனாளிகள் வாழும் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றிற்கு 22 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் தொழில் தகைமைக்கு ஏற்ப தொழில்வாய்ப்பு வழங்கப்படும். விவசாய உற்பத்தி உதவியாளர், பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை உதவியாளர் அடங்கலாக 25 சேவைப் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான விபரங்கள் அடங்கிய விளம்பரம், பல நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் 20.01.2020 வெளியான தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

1. க.பொ.த. சாதாரண தரம் சித்திக்கான மட்டத்தை விட குறைந்த கல்வித் தகைமையை உடையவராக இருத்தல்.

2. வயதெல்லை : 18 - 40

3. சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகைமை பெற்ற ஆனால் நிவாரணம் பெறாத குடும்பத்தில் வேலைவாய்ப்பு இல்லாது இருத்தல்.

4: சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பத்தில் வேலை வாய்ப்பு இல்லாத உறுப்பினராக இருந்தல்

5. வயோதிப, நோயாளியான பெற்றோர் அல்லது ஊனமுற்ற உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தில் வேலைவாய்ப்பு இல்லாத உறுப்பினராக இருத்தல்.

6. விண்ணப்பிக்கும் பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் போன்ற தகைமைகளுடன்

1. 6 மாத பயிற்சிக் காலத்தில் - 22500 ரூபாய்.

2. பயிற்சியின் பின்னர் PL1 சம்பளம்.

3. 10 வருட திருப்திகரமான சேவையின் பின்னர் ஓய்வூதியம் போன்றவற்றுடனும்

1. விவசாய உற்பத்தியாளர்

2. பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை உதவியாளர்

3. மக்கள் சுகாதார மேம்பாட்டு உதவியாளர்

4. அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்.

5. சுற்றாடல் முகாமைத்துவ உதவியாளர்

6. விற்பனை சேவை உதவியாளர்

7. போக்குவரத்து நடவடிக்கை உதவியாளர்

8. கணனி தகவல் தொழில்நுட்ப உதவியாளர்

9. போதைப்பொருள் நிவாரண நடவடிக்கை உதவியாளர்

10. சமையலாளர், உணவு சாலை விடுதியாளர்

11. சுற்றுலா, தோட்ட உதவியாளர்

12. விளையாட்டு நிறுவன உதவியாளர்

13. தச்சுத் தொழிலாளர் மற்றும் உதவியாளர்

14. ஆடைகள் தைப்பவர்

15. மேசன் மற்றும் உதவியாளர்

16. ஒப்பனை அலங்கார நிலைய உதவியாளர்

17. மின்சார தொழில்நுட்ப உதவியாளர்

18. சாரதி மற்றும் சாரதி உதவியாளர்

19. மிருக பராமரிப்பு உதவியாளர்

20. எரிபொருள் நிரப்பு நிலைய உதவியாளர்

21. வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் உதவியாளர்

22. ஆயுதம் தரிக்காத பாதுகாப்பு சேவையாளர்

23. சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தி உதவியாளர்

24. பொருத்துநர் (வெல்டிங்)உதவியாளர்

25. வீடு பராமரிப்பு, நலன்புரி மற்றும் பராமரிப்பு சேவை. போன்ற துறைகளுக்கு உள்ளீர்க்கப்படவுள்ளனர். (ஜ-114)

# நீர் வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளர் நியமனம்

(நெளுக்குளம்)

நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவால் தனது அமைச்சின் வன்னி மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு செயலாளராக வி.சங்கரலிங்கம் என்பவரை நேற்று நியமனம் செய்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சில் வைத்து இந்த நியமனக் கடிதத்தினை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வழங்கினார்.

இவர் முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சபையின் வடக்கிற்கான நிபுணராகவும் தற்போது ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின் வன்னி மாவட்ட செயலாளராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-299)

## "இராணுவத்தினர் உட்பட அனைவரையும் விடுவியுங்கள்"

# கருணா சுதந்திரமாக திரியும் போது அரசியல் கைதிகளுக்கு ஏன் சிறை?

## ஜனாதிபதியிடம் அஜித் பிரசன்ன கேள்வி

(கொழும்பு)

சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் உட்பட இராணுவத்தினரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் ஒரே நேரத்தில் விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சுனில் ரத்நாயக்க உட்பட இராணுவத்தினரை மாத்திரம் விடுவித்தால் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கச் செய்யக்கூடும் என்பதனால் அரசியல் கைதிகளை சேர்த்து விடுவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

கருணா, கே.பி. போன்றோர் சுதந்திரமாக இருக்க முடியும் என்றால் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 70 பேருக்கும் விடுதலை கிடைக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"றோயல் பார்க் கொலை வழக்குடன் தொடர்புடைய அன்ரனி என்ற கோடீஸ்வர வர்த்தகரின் மகனுக்கு பொது மன்னிப்பு வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை மேற்கொண்டார்.

எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்ட பலருக்கு மத்தியில் ஒருவருக்கு மாத்திரம் மன்னிப்பு வழங்குவது என்ன நியாயம் எனக் கூறி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மைத்திரி அதற்கு சாட்சியளிக்க வேண்டும்.

சமகால ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் அதே நிலைமை ஏற்படும். போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் சிறையில் உள்ளனர். சுனில் ரத்நாயக்க மாத்திரம் சிறையில் இல்லை. 4 சிரேஷ்ட இராணுவத்தினர் சிறையிலேயே உள்ளனர். அந்த நால்வருக்கு மாத்திரம் மன்னிப்பு வழங்கினால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

அப்படி என்றால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்க மாட்டீர்களா? சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரமா? மன்னிப்பு வழங்கப்படும். எனவே எதிர்வரும் மாதம் 4 ஆம் திகதி அரசியல் கைதிகள் 70 பேர் உட்பட இராணுவத்தினரை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)



யாழ்.நீரிழிவு கழகத்தினரால் சாவக்கட்டு கிராம சனசமூக நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நீரிழிவு தொடர்பான செயலமர்வில் யாழ்.நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# புதிய அரசின் வரிச்சலுகைகள் மூலம் பொது மக்கள் பயன்பெறவில்லை

## விஜேபால குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் வழங்கிய வரிச்சலுகைகள் மூலம் பொது மக்கள் உரிய சலுகைகளைப் பெறவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி குற்றம் சாட்டினார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், பல்கலைக்கழக மாணவர்களுக்கு உயர்கல்விக்காக வழங்கப்படும் வங்கிக் கடன்களும் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் குற்றம் சாட்டினார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வழங்கப்பட்ட பல மானியங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்றும் நாட்டின் நிலைமை தற்போது மோசமடைந்துள்ளதாக பெரும்பான்மையான மக்கள் கூறுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பொருட்களின் விலை உயர்வு, அதிகரித்த வாழ்க்கைச் செலவு, அரசியல் பழிவாங்கல் மற்றும் பணி இடமாற்றங்கள் குறித்து சிறப்பு ஒத்திவைப்பு விவாதம் நாடாளுமன்றத்தில் நாளை புதன்கிழமை நடைபெறும் என்றும் விவாதத்தின் போது, அரசாங்கத்தின் பதிலை பொதுமக்கள் அவதானிக்க முடியும் என்றும் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை "கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு எதிர்காலத்தில் ஒரு வலுவான அணியாக செயற்படும். இது தொடர்பாக கட்சித் தலைமைக்குள் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. எந்தவொரு சூழ்நிலையிலும் கட்சி பிளவுபடாது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# இலங்கையை மாலைதீவைப் போன்று சுற்றுலாத்தலமாக மாற்றியமைப்போம்

(கற்பிட்டி)

இலங்கையை மாலைதீவுக்கு இணையாக மாற்றுவதற்கு சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். மாலைதீவுடன் போட்டியிட வேண்டுமாயின் அழகிய தீவுகள் நிறைந்த கற்பிட்டியில் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க வேண்டும்.

மாலைதீவுக்கு சளைக்காத அதிசயங்கள் கற்பிட்டி தீவுகளில் இருக்கின்றன என சுற்றுலாத் துறை ஊக்குவிப்பு அமைச்சரும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார். நேற்று முன்தினம் சனிக்கிழமை கற்பிட்டி சுற்றுலாத்துறை ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் கற்பிட்டியில் இடம் பெற்ற சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கற்பிட்டி சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக சுற்றுலா

ஊக்குவிப்பு அமைச்சு எதனையும் செய்யவில்லை. தற்போது இணையத்தளங்களில் இருப்பது கற்பிட்டி சுற்றுலாத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களால் உருவாக்கப்பட்ட வீடியோக்கள் மாத்திரமேயாகும். கற்பிட்டி வரலாற்று ரீதியான பெறுமதியுள்ள ஒரு பிரதேசமாகும்.

மனித குடியேற்றங்களில் ஆரம்பமான தம்பபன்னி பூர்வீக குடியேற்றம் அமைந்திருப்பதும் இதற்கு அண்மையிலாகும். நீரில் காணக்கூடிய மிகப்பெரும் மீனான திமிங்கிலம், மேட்டு நிலத்தில் காணக்கூடிய மிகப் பெரும் மிருகமான யானையையும் சுற்றுலாப்பயணிகளால் ஒரே பயணத்தில் கண்டுகளிக்கக்கூடிய இடம் இப்பிரதேசம் மாத்திரமேயாகும்.

இதற்கு மேலாக டொல்பின் மீன்கள், கோரல்கள், பட்டாங்கள் விடும் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்கள், வில்பத்து கங்கேவாடி பிரதேசத்தில் முயல்கள், மான்கள், சிறுத்தைகள் போன்றவற்றையும் இப் பிரதேசங்களில் காண முடியும். சுற்றுலாத்துறை அமைந்துள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் சுற்றுலா அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சனுடன் தொலைபேசி உரையாடல் எதிரொலி நாட்டை விட்டு வெளியேறினார் நடிகை பியூமி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல் வெளியானதால் நடிகை பியூமி ஹன்சமாலி நாட்டை விட்டு வெளியேறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ரஞ்சன் போன்ற அரசியல் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டதற்கு வருத்தம் அடைவதாக அவரது சமூக வலைத் தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை இந்தக் குரல் பதிவால், பல நடிகர்கள் மற்றும் நடிகைகளின் வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த நான்காம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதன்போது பல இறுவெட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதனையடுத்து முன்னைய ஆட்சியின் போது குற்றப்புலனாய்வு திணைக்கள முனனாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான குரல் பதிவுகள் அனைத்தும் பகிரங்கமாகியிருந்தன.

இவ்வாறு முக்கிய பிரமுகர்கள் பலரின் குரல் பதிவுகள் பகிரங்கமாகி வருகின்ற நிலையில் நடிகை பியூமி ஹன்சமாலியும் குறித்த குரல் பதிவு காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## பிரதமரின் இணைப்புச் செயலாளராக செந்தில் தொண்டமான் நியமனம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பெருந்தோட்டத் துறைக்கான இணைப்புச் செயலாளராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டார்.

குறித்த நியமனத்துக்கான கடிதத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று அவருக்கு வழங்கியுள்ளார். இந்த நியமனத்தின் கீழ் கல்வி, தோட்ட உட்கட்டமைப்பு, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு போன்ற பொறுப்புக்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## பொலித்தீன், பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் ஆதரவுடன் கோர் மற்றும் எஸ். எல்.சி.டி.எப். தனியார் நிறுவனங்கள் இணைந்து பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை செவ்வாய்க் கிழமை நடத்தவுள்ளனர். குறித்த விழிப்புணர்வு ஊர்வலமானது சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக காலை 8 மணியளவில் ஆரம்பமாகி ஏ-9 வீதி ஊடாக சாவகச்சேரி நகர சபையை வந்தடையும்.

குறித்த ஊர்வலத்திற்கு சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினரும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தனர். (ஜ-30)

## மீண்டும் திறக்கப்படும் தந்திரிமலை

(வில்பத்து)

வில்பத்து தேசிய சரணாலயத்தின் தந்திரிமலை மற்றும் மஹவிலச்சிய நுழைவாயில் சுமார் 9 வருடங்களின் பின்னர் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகள் வளங்கள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

மேலும் சரணாலயத்தை சூழவுள்ள ஹணுவில, குகுல் கட்டுவ, முசிங்ககம மற்றும் கடுபத்கம ஆகிய 4 வாவிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை வில்பத்து சரணாலயத்தில் புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கும் புதிய வீதிகளை அமைப்பதற்கும் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொழுகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 280 | 300 |
| தக்காளி | 360 | 280 | 370 | 140 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 120 | 100 | 100 |
| கோவா | 220 | 180 | 180 | 120 | 200 |
| கரட் | 350 | 400 | 300 | 300 | 500 |
| பூசணி | 80 | 80 | 60 | 50 | 100 |
| புடோல் | 140 | 150 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 300 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 170 | 150 | 240 |
| வெண்டிக்காய் | 160 | 180 | 140 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 70 | 100 |
| பயற்றங்காய் | 150 | 200 | 180 | 130 | 200 |
| லீக்ஸ் | 200 | 300 | 370 | 350 | 480 |
| பீற்றூட் | 150 | 140 | 180 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 140 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 1600 | 1100 | 500 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 200 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 40 | – | 90 | 60 |
| கீரை - 1பிடி | 60 | 35 | 40 | 60 | 40 |
| தேசிக்காய் | 30 | 25 | 50 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-60 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 150 | 150 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 | 200 | 280 |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 90 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | – | – | 120 | 100 |

# எதுவும் ஒரு தொழில்தான்

இரத்தினபுரி என்னும் சிற்றூருக்கு மாதவன் என்னும் இளைஞன் வேலை தேடி வந்தான். அந்த ஊரில் எல்லா இடங்களிலும் வேலை தேடி அலுத்து போனான்.

எங்கும் வேலை கிடைக்க வில்லை. காரணம் இவன் வெளியூர்க்காரன். இவனை நம்பி எப்படி வேலை கொடுப்பது என்று நிறையப் பேர் வேலை தர மறுத்து விட்டனர். மாதவன் பாவம் சோர்ந்து போய் விட்டான். அவனுக்கு அவன் அம்மாவிடம் சொல்லி வந்தது ஞாபகம் வந்தது.

அவன் அம்மா சுமார் ஐம்பது மைல் தள்ளி வசித்து வந்தார். கூலி வேலையாளாக அங்குள்ள விவசாய தொழிலுக்கு சென்று கொண்டிருந்தார். மாதவனின் அப்பா இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமாகி விட்டார். இதனால் வீட்டில் கஷ்டமான நிலைமை வந்து விட்டது. மாதவன் அப்பொழுது அங்குள்ள பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். அப்பா காலமாகிய பின் வீட்டில் நிலவிய வறுமையை கண்டு அம்மாவிடம் நான் எப்படியாவது வெளியூர் சென்று பணம் சம்பாதித்து உனக்கு அனுப்புகிறேன் என்று உறுதி சொல்லி வந்திருந்தான். ஆனால் இங்கு நிலைமையோ வேறாக இருந்தது. எங்கும் வேலை கிடைக்கவில்லை. என்ன செய்வது? பசி வேறு அவன் காதை அடைத்தது. அங்குள்ள் ஒரு கோவிலில் உட்கார்ந்து அடுத்து என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்திருந்தான். மறுபடி ஊருக்கே போய் விடலாமா? என்ற எண்ணம் அவனுக்கு வர ஆரம்பித்து விட்டது.

அப்பொழுது ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து பெண்களும், குழந்தைகளும் இறங்கி கோயிலுக்குள் வந்தனர். வந்தவர்கள் தங்களது செருப்புகளை எங்கு கழற்றி வைப்பது என்ற சிந்தனையில் நின்றனர். இவன் கோயில் வாசலில் உட்கார்ந்திருப்பதை கண்டவர்கள், தம்பி இந்த செருப்பை எல்லாம் பாத்துக்க! என்று எல்லோரும் செருப்பைக் கழற்றி வைத்து விட்டு உள்ளே சென்றனர்.

மாதவன் திகைத்து நின்றான். அவன் அவர்களுக்கு பதில் சொல்ல நினைக்கும் முன்னரே அவர்கள் தங்கள் செருப்புகளை அவன் முன்னால் கழற்றி வைத்து விட்டு விறு விறுவென உள்ளே நுழைந்து விட்டதால், இனி எங்கும் செல்ல முடியாது, அவர்கள் வரும் வரை காத்திருந்து அவர்கள் செருப்புகளை ஒப்படைத்து விட்டுச் செல்வதுதான் நல்லது என்று முடிவு செய்தான். பசி வேறு அவனை மயக்க நிலைக்கு கொண்டு சென்றது.

உள்ளே சென்றவர்கள் ஒரு மணி நேரம் கழித்தே வெளியே வந்தனர். வந்தவர்கள் இவன் அருகில் வந்தனர். அப்பொழுது அவன் பசி மயக்க நிலையிலேயே இருந்தான். அவர்கள் விறுவிறுவென செருப்புகளை மாட்டிக்கொண்டு இவனை பார்க்க இவன் நிலைமையை கண்டு அந்த கூட்டத்தில் இருந்த பெரியவர், ஐம்பது ரூபாய் எடுத்து அவன் கையில் கொடுத்தார். இவனுக்கு என்ன கொடுக்கிறார் என்று தெரியாமல் அவர் கொடுத்ததை வாங்கிக்கொண்டவன் அதை உற்றுப் பார்க்க ரூபாய் ஐம்பதாக இருக்கவும் பயந்து சேர் ஐம்பது ரூபாய் கொடுக்கிறீங்க, இவ்வளவு வேண்டாம் சேர் என்று சொன்னான். அந்தப் பெரியவர் புன்சிரிப்புடன் தம்பி உன்னை பார்த்தா பசியில துடிக்கிற மாதிரி இருக்கு, போய் நல்லாச் சாப்பிடு, அதுக்குத்தான் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டு காரில் ஏறிச் சென்று விட்டார்.

மாதவனுக்கு அந்தப் பசியிலும் ஆச்சர்யமாக இருந்தது. என்ன ஒரு ஆச்சர்யம். காலையில் பத்து பைசா இல்லாமல் இந்த ஊருக்கு வேலை தேடி வந்த நான் இப்பொழுது ஐம்பது ரூபாய் கையில் வைத்திருக்கிறேன். ஆண்டவன் யாரையும் கைவிடுவதில்லை. நாம் மட்டும் மனதை இழக்காமல் இருந்தால் போதும். மனதுக்குள் வைராக்கியம் வர எழுந்தவன் முதலில் பசியைப் போக்க ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து யோசிக்கலாம் என்று முடிவு செய்தான்.

சாப்பிட்டு வந்தவுடன் கோயில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து ஐயா கோயிலுக்கு வருபவர்களின் செருப்புகளை நான் பார்த்துக் கொள்ள அனுமதி வேண்டும் என்று கேட்டான்.

அவனுடைய நல்ல நேரம் அப்பொழுதுதான் அங்கு ஒருவர் செருப்பை கழற்றி வைத்துவிட்டு கோயில் உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது செருப்புக் காணாமல் போயிருந்தது. உடனே நிர்வாக அலுவலகத்திற்கு வந்து புகார் கொடுத்துக்கொண்டிருந்தார். இவன் போய் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லவும் கோயில் நிர்வாகம் மகிழ்ச்சியுடன் அனுமதி கொடுத்து அதற்குண்டான சிறிய தொகை ஒன்றை சொல்லி அதனை பெற்றுக்கொள் என்று அனுமதி கொடுத்து விட்டது.

நாட்கள் நகர்ந்தன. சுமார் ஆறு மாதங்கள் ஓடி விட்டன. இப்பொழுது மாதவன் கோயில் ஒதுக்கிக் கொடுத்த இடத்தில் செருப்புகளை பாதுக்காக்க வசதி ஏற்பாடு செய்து அதனை கவனித்துக் கொள்ள, அம்மாவை வரச் சொல்லி விட்டான். அது மட்டுமல்ல அங்கு வரும் இரு சக்கரம், நாலு சக்கர வண்டிகளைப் பாதுகாக்கும் வேலையையும் கோயில் நிர்வாகத்திடம் பெற்று, வாகனங்களைப் பாதுக்காக்கும் வேலையையும் பார்த்துக்கொள்கிறான். கையில் கொஞ்சம் பணமும் சேர்த்துக் கொண்டிருக்கிறான். அவன் அம்மாவிற்கு பையன் படிப்பு பாழாகி விட்டதே என்ற கவலை இருந்தாலும், வீட்டில் வறுமை ஒழிந்து விட்டதே என்ற நிம்மதியில் இருந்தார்.

மாதவன் இப்பொழுது சுறுசுறுப்பாக செருப்பு, இரு சக்கர வாகன பாதுகாப்பு இரு வேலைகளையும் திறம்பட கவனித்துக் கொண்டாலும் எதிர்காலத்தில் அடுத்து பெரிய வேலை ஏதாவது எடுத்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறான். அதுமட்டுமல்ல, தன் கல்வியை எதிர்காலத்தில் எப்படியாவது நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் சபதம் எடுத்துக்கொண்டிருக்கிறான்.

குட்டீஸ் "சாதாரண செருப்புத் தானே" என்று நினைக்காமல் அதை பாதுகாப்பது கூட ஒரு தொழிலாக நினைத்து முன்னேறி இருக்கும் மாதவனை பாராட்டி விடுவோம். வறுமையைக் கண்டோ அல்லது மற்ற துன்பங்களை கண்டோ மனம் தளராமல் இருந்தாலே கண்டிப்பாய் அதற்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்பதை இந்த கதையில் தெரிந்து கொண்டோமல்லவா?

## உருவில் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## இதில் எது முதலில் நிறையும்




## விடுகதை

- ஒற்றைக் காதுக்காரன், ஓடி ஓடி வேலி அடைக்கிறான். அது என்ன?
  **ஊசி**
- புறப்பட்டது தெரிகிறது போன சுவடு தெரியவில்லை. அது என்ன?
  **புயல்**
- பார்த்தால் கல்; பல் பட்டால் நீர். அது என்ன?
  **பனிக்கட்டி**

## பழமொழிகள்

- சொல் அம்போ வில் அம்போ?
- சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
- சொல்லாமற் செய்வார் நல்லோர் சொல்லியுஞ் செய்யார் கசடர்.
- சொல்வல்லவனை வெல்லல் அரிது.
- சொறிந்து தேய்க்காத எண்ணெயும் பரிந்து இடாத சோறும் பாழ்.
- சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனம்.
- சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
- சோம்பலே சோறு இன்மைக்குப் பிதா.
- சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே.
- சோளியன் குடுமி சும்மா ஆடுமா?
- சோற்றுக்குக் கேடு பூமிக்குப் பாரம்.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
- தனிமரம் தோப்பாகாது.
- தன் வினை தன்னைச் சுடும்.

வாழ்க்கையில் நீங்கள் அதிகம் வெற விரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாகக் கொடுங்கள்.
– ஸ்டோன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதான கட்சிகளுக்கு ஏற்படப் போகும் அஸ்தமனம்

இந்த உலகில் இருந்த எத்தனையோ ஜீவ ராசிகள் இப்போது இல்லாமல் போய்விட்டன.

கால சூழ்நிலைகள் அவ்வாறானதொரு முடிவைச் செய்துள்ளது.

இதுபோல எத்தனையோ சாம்ராஜ்யங்கள், சமஸ்தானங்கள், அரச பரம்பரைகள் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளன.

இத்தகைய மறைவுகள் காலத்துக்கு காலம் நடந்து கொண்டே இருக்கின்றன.

இவ்வாறான மறைவுக்குக் காரணங்கள் இருக்கவே செய்கிறது. உதாரணத்துக்கு அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயில் வன ஜீவராசிகள் எரியுண்டு போனதை நினைக்கையில் இதயம் நெகிழும்.

அந்தளவுக்கு காட்டுத்தீ இலட்சக்கணக்கான வனஜீவராசிகளைக் காவு கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியக் காட்டுத்தீ ஏற்பட்டதன் காரணமாக அங்குள்ள வனஜீவராசிகள் கொள்ளை கொள்ளையாக அழிந்து போயின என்பதற்கப்பால்,

தண்ணீர்ப் பஞ்சத்தைத் தவிர்க்க சுமார் இருபதாயிரம் ஒட்டகங்களை சுட்டுக்கொல்கின்ற நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா அரசாங்கம் எடுத்துள்ளதாம்.

உலகம் முழுவதையும் தகவல் தொழில் நுட்பம் தன் வசப்படுத்தியிருக்கையில், அவுஸ்திரேலியாவில் இருபதாயிரம் ஒட்டகங்களை சுட்டுக்கொல்கின்ற கொடுமை நடப்பதைத் தடுக்க யாருமில்லை என்பதுதான் வேதனைக் குரிய விடயம்.

ஆக, மனிதர்கள் தொடக்கம் ஏனைய ஜீவ ராசிகள் வரையில் அவற்றுக்கான ஆபத்துக் களும் இழப்புக்களும் நடந்த வண்ணமுள்ளன.

தடுக்கக்கூடிய வழிமுறைகள் இருந்தும் அதனைச் செய்யமுடியவில்லை என்பதற்குள் இயற்கையின் நியதியும் அதுவாக உளதோ என்று எண்ணத் தோனறும்.

அதேவேளை இயற்கையாகவோ அன்றி செயற்கையாகவோ ஏற்படுகின்ற மாற்றங்கள் மிகப்பெரிய முன்னேற்றங்களையும் எழுச்சி களையும் தந்துள்ளன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

இரண்டாம் உலகப் போரில் யப்பான் மீது அணுக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட தன காரணமாக அணுக்குண்டுத் தாக்கு தல்களுக்கும் போர் வன்முறைகளுக்கும் எதி ரான கோசங்கள் எழத் தொடங்கின.

யப்பான் மீதான தாக்குதல் மிகப்பெரிய பாவச் செயல் என்பதை உலகம் உணர்ந்து கொண்டது.

அதேநேரம் தாக்குதலுக்கு உள்ளான யப் பான் போர் என்ற நினைப்புக்கே இடம் வைக் காமல் தனது நாட்டின் உயர்வு பற்றிச் சிந்தித் தது. அதனால் இன்று உலகம் முழுவதும் யப்பான் நாட்டின் உன்னதமான உற்பத்திகளை நுகரக்கூடியதான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எனவே சில சம்பவங்கள் பாரிய முன்னேற் றத்துக்கும் அடிமைத்தளையை அறுப்பதற் கும் அடிப்படையாக இருக்கிறது என்பதை இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

இந்த வரிசையில், இலங்கையின் அரசி யல் வரலாற்றில் நீண்டு நிலைத்திருந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் அஸ்தமனமாகிப் போகின்ற சூழலுக்குள் அகப்பட்டுள்ளன.

ஆம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர் காலத்தை எட்டிப்பார்க்கையில் இருள் மட்டுமே தெரிகிறது.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சந்திரிகா குமாரதுங்கவுக்கு இடமில்லை என்று வந்தபின்பு அந்தக் கட்சியின் அஸ்தமனம் உறுதியாயிற்று.

இதுபோல ஜக்கிய தேசியக் கட்சியைக் காப் பாற்றுவதாயின் ரணில் விக்கிரமசிங்கவை கட்சியில் இருந்து வெளியேற்றுவதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு அந்தக் கட்சியின் முக்கி யஸ்தர்கள் வந்துள்ளனர்.

ஆக, தேசிய அரசு என்று வெளிக்கிட்டு மைத்திரி ஜனாதிபதியாகவும் ரணில் பிரதம ராகவும் ஆக வைத்து இரு பெரும் பிரதான கட்சி கள் அழிவைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

இந்த வரிசையில் ஈழத் தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியொன்றுக்கும் காலன் கயிறு வீசக் காத்திருக்கிறான்.

அதைக் காப்பாற்றுவதாயின் தலைமையை மாற்றுவதுதான் ஒரே வழி என்பது முடிவாகி விட்டது.

# முதலிடத்திலிருந்த தமிழ் மொழி வீரவன்ச உத்தரவால் இரண்டாம் இடத்துக்கு மாற்றம்

## பேரினவாதிகளின் சர்ச்சையால் மன்னாரில் இந்நிலை

(மன்னார்)

மன்னாரில் பனை அபிவிருத்திச் சபையின் கீழான பனந்தும்பு உற்பத்தி நிலையத்தின் பெயர்ப்பலகையில் முதல் வரியிலிருந்த தமிழ் மொழி அமைச்சர் விமல் வீரவன்சவின் பணிப்பில் இரண்டாவது வரிக்கு மாற்றப்பட்டு சிங்களமொழி முதல் வரியில் இடம்பிடித்துள்ளது.

வடக்கு - கிழக்கு கடந்த ஒருவாரம் பயணம் மேற்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச, தலைமன்னாரில் பனந்தும்பு உற்பத்தி நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச, பனந்தும்பு உற்பத்தி நிலையத்தினைத் திறந்து வைத்து பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்த போது, பெயர்ப்பலகையில் தமிழ் மொழி முதல் வரியில் இருந்தது. சிங்களமொழி இரண்டாவது வரியில் இருந்தது.

இந்த திறப்புவிழா ஒளிப்படங்களை அமைச்சர் விமல் வீரவன்ச, தனது முகநூலில் பதிவிட்ட போது, பெயர்ப்பலகையில் முதல் வரியில் தமிழ்மொழி காணப்பட்டதால், பேரினவாதிகள் பல்வேறு இனவெறிக் கருத்துக்களைப் பதிவிட்டனர்.

இதனால் பனந்தும்பு உற்பத்தி நிலையத்தின் பெயர்ப்பலகையில் முதல் வரியிலிருந்த தமிழ்மொழி அமைச்சர் விமல் வீரவன்சவின் பணிப்பில் இரண்டாவது வரிக்கு மாற்றப்பட்டு சிங்களமொழி முதல் வரிக்கு நேற்று திங்கட் கிழமை மாற்றப்பட்டுள்ளது.

பெயர் பலகையில் மாற்றம் செய்ததனை தனது சமூக வலைத்தளத்திலும் அமைச்சர் பதிவேற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பெயர்ப்பலகையில் தமிழ்மொழி முதலிடத்தில் காணப்பட்டதால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விமல் வீரவன்ச பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் மன்னாரில் பனை அபிவிருத்திச் சபையின் கீழான தொழிற்சாலை பெயர்ப் பலகையில் தமிழ்மொழி முதலிடத்தில் காணப்பட்டதால் அமைச்சர் விமல் வீரவன்சவின் ஆதரவாளர்கள் உட்பட பேரினவாதிகள் பெரும் சர்ச்சையை எழுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-285)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றில் பெரும்பான்மையை பெறமுடியும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுவதனால் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை பொதுஜன பெரமுனவும் அதன் பங்காளிகளும் வெற்றிபெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பில் பேசிய அவர், 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 4 மாத காலங்களுக்கான அரசாங்க செலவீனங்களுக்காக 1,474 பில்லியன் ரூபாவை ஒதுக்கும் கணக்கு வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளமையினால் அரசாங்கத்தின் செலவுகள் தடை செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

எனவே தேர்தலுக்கு பின்னர் புதிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அனைத்து பிரிவுகளுக்கும் கூடுதல் சலுகைகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, நாட்டில் 6.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு எதிர்ப்பார்த்து ள்ளதாகவும் பொருளாதார வளர்ச்சியை அடைய தனியார் துறையிலிருந்து அதிகபட்ச பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் நீதித்துறையின் சுயாதீனத்தை நிலை நிறுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒருமித்து செயற்பட வேண்டும் என்றும் ஒரு அரசாங்கம் என்ற ரீதியாக நாட்டில் நீதித் துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

### பாராளுமன்ற தெரிவுக்குழுவில்

## எதிர்க்கட்சி உறுப்பினர்களை பரிந்துரைத்தது அரசாங்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 8 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்ட பெயர்ப்பட்டியலை அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுக்களுக்காக சபை முதல்வர் டினேஸ் குணவர்தனவினால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச அங்கத்துவ பெயர்பட்டியல் பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் லக்ஷ்மன் கிரியெல்ல, ஜோன் அமரதுங்க, விஜித ஹேரத், ரிஷாட் பதியூதின், சம்பிக்க ரணவக்க, மனோ கணேஷன், நிரோஷன் பெரேரா, மாவை சேனாதிராஜா, ஆகிய 8 எதிர்கட்சி உறுப்பினர்களின் பெயர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தின் சார்பாக சமல் ராஜபக்ஷ, நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ்குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, டக்ளஸ் தேவானந்தா, மகிந்த சமரசிங்க, காமினி லொக்குகே, மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகிய 9 உறுப்பினர்களின் பெயரும் தெரிவுக்குழுக்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுமதி இன்று இடம்பெறவுள்ள பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது அனுமதி வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

எல்லோரிடத்திலும் சம அன்பு கொள்ளுதல் மிகக் கடுமையான ஓர் ஒழுக்கம் ஆகும். ஆனால் இந்த ஒழுக்கம் இன்றி முக்தி கிடைக்காது.

- சுவாமி விவேகானந்தர்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மதவுவைத்தகுளம் கிராமம், சூடுவெந்தபுலவு, பகல அளுத்வத்த கிராமம், மகாறம்பைக்குளம், சாளம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறை இன்பத்தை அனுபவிக்க...

ஒரு பக்தனுக்கு வறட்டு விளக்கங்களெல்லாம் அவன் கொண்டுள்ள எண்ணத்தை உறுதிப்படுத்த தேவைப்படுகிறதே தவிர அதற்கு மேல் அவற்றால் எந்தப் பயனுமில்லை. ஏனென்றால் அவன் செல்லும் பக்தி என்னும் இந்தப் பாதை அவனை வெகு சீக்கிரம் தெளிவற்றதும் கொந்தளிப்பு மிக்கதுமான ஆராய்ச்சி நிலைகளைக் கடக்கச் செய்கிறது. மேலும் இது இறைக்காட்சி பெறும் நிலைக்கு உயர்த்தத் தகுதி வாய்ந்ததாக உள்ளது.

இறைவனின் திருவருளால் அவன் செய்த உன்னத நிலையை விரைவில் அடைந்து விடுகிறான். அங்கே கற்பனைக்கோ, வலுவிழந்த ஆராய்ச்சிக்கோ இடமில்லை. வெற்று ஏட்டுக் கல்வியின் துணையோடு இருளில் உழன்று கொண்டிருக்கும் அலைச்சல்கள் இல்லை. அங்கே அவன் இறையனுபூதி என்னும் ஒளியை நேரே தரிசிக்கிறான். அதன் பிறகு அவன் காரணம் தேடி அலைவதில்லை. பெரும்பாலும் அவன் இறைக்காட்சியைக் கண்டுவிட்டவனாகக் காணப்படுகிறான்.

உண்மையை உணர்ந்து கொண்டதால் விவாதிப்பதில்லை. இறைவனைக் கண்டுகொள்வதும் அவனை உணர்வதும் இறையின்பத்தை அனுபவிப்பதுமாகிய இந்த நிலை பெருநிலை அல்லவா? வாழ்க்கையில் நாம் அடையக்கூடிய மிகப்பெரும் பயன் இதைவிட வேறென்ன இருக்க முடியும்?

# றிபேக்ஸ்ரார் அணியை வீழ்த்தி வாகை சூடியது ஜொலிஸ்ரார்

மட்டுவில் மகா வித்தியாலயத்தின் மைதானம் திறப்பு விழாவை முன்னிட்டு தென்மராட்சி சமூகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட காட்சிப் போட்டியில், ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து றிபேக் ஸ்ரார் அணி மோதியீ போட்டி மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற றிபேக் ஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பை தீர்மா னித்தது.

இதற்கமைய துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 15

ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுமேஸ் 25 ஓட்டங்களையும், கிருஷோபன் 16 மற்றும் சிந்துஜன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் றிபேக்ஸ்ரார் அணி சார்பில் தர்சன் 4 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றிபேக் ஸ்ரார் அணியினர் 15 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

முடிவில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் பார்த்தீபன் 44 ஓட்டங்களையும் சுரேந்திரன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலி ஸ்ரார்ஸ் அணி சார்பில் சாருஜன் 2 விக்கெட்டுக்களையும் வாமணன், கிருஷோபன் மற்றும் பிருந்தன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக யுமேஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி உரும்பிராய் பைங்கரன் அணி சம்பியன்

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உரும்பிராய் பைங் கரன் அணி சம்பியனாகியது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் கலை மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உரும் பிராய் பைங்கரன் அணியை எதிர்த்து உரும்பிராய் ஒஸ்கா அணி மோதியது.

இதில் உரும்பிராய் பைங் கரன் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:18, 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

**கட்டைவேலி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் தரம்-3 கலப்பு அணி கடந்த 18 ஆம் திகதி நாவலப்பிட்டி ஜயதிலக மைதானத்தில் நடைபெற்ற செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் பங்குபற்றி வரலாற்றில் முதற் தடவையாக தங்கப் பதக்கம் வென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். (க)**

**தர்மபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் உதைபந்தாட்டத்தில் பாரதியினை எதிர்த்து கம்பன் அணி மோதியது. இறுதியில் கம்பன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் கம்பன் இல்லம் வெற்றி பெற்றது. (க)**

# மன்னார் 'டைமன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 'டைமன் ஸ்டார்' விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த மூன்று தினங்களாக நானாட்டான் பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

சுமார் 40 அணிகள் பங்கு பற்றிய உதைபந்தாட்ட போட்டியில் சென் ஜோசப் முத்தரிப்புத்துரை அணியும், சென் சேவியர் தேவன்பிட்டி ஆகிய இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோதராதலிங்கம் நானாட்டான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் நானாட்டான் பங்குத்தந்தை, டைமன் ஸ்டார் விளையாட்டு கழக வீரர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

போட்டியில் இரண்டு அணிகளுக்கும் இடையில் விறுவிறுப்பான ஆட்டம் நடைபெற்றது. இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் போடாத காரணமாக தண்ட உதை வழங்கப்பட்டது. இதில் 4.3 என்ற கோல் கணக்கில் சென். ஜோசப் முத்தரீப் புத்துரை அணி வெற்றி பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்களும் பணப்பரிசில்களும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டது. (க)

## மேலதிக வரப்பிரசாதங்...

அவர், முன்னாள் பிரதமருக்கு வழங்கப்படும் வசதிகளை விட மேலதிகமாக சிறப்பு பாதுகாப்பு, வீடு மற்றும் பிற வசதிகளை ரணில் விக்ரமசிங்க கோரியதாக கூறினார்.

இருப்பினும், அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை கட்சிக்குள் இருக்கும் நெருக்கடி காரணமாக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களிடமிருந்து ரணில் விக்ரமசிங்கவிற்கு பாதுகாப்பு தேவைப்படலாம் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். (ம-3)

## கடன் தொல்லை காரணமாக...

கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மட்டுவில் சந்திபுரம் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த கணவன் மனைவியான சிவபாலன் சிவலக்சன் (வயது - 35), சிவலக்சன் கீர்த்திகா (வயது - 35), நவரத்தினம் விமலேஸ்வரி (வயது - 64) ஆகியோரே உயிரை மாய்க்க முற்பட்டுள்ளனர்.

கடன் தொல்லை காரணமாக இவர்கள் உயிரை மாய்க்க முற்பட்டு நஞ்சு அருந்தியுள்ளனர். இந்த நிலையில் பெண்ணின் தாயார் உயிரிழந்துள்ளார்.

கணவன் மனைவி ஆகியோர் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9,10,114)

## திருட்டு குற்றச்சாட்டில் பொலி...

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட இளைஞன், அரியாலை பூம்புகாரை சேர்ந்த தனது மகன் என தெரிவித்துள்ள தாயார் ஒருவர் பொலிஸாரிடம் தனது மகன் எங்கே என கேட்டுள்ளார்.

எனினும் பொலிஸார் தாம் அவரை கைது செய்யவில்லை என மறுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட தாயார் தெரிவித்தார்.

எனினும் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்ட தனது மகனை பொலிஸார் அழைத்து சென்றதாக சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்தவர்கள் கூறியுள்ளனர் என தாயார் தெரிவிக்கிறார்.

இந்த சம்பவம் நடைபெற்று சில நாட்கள் ஆகின்ற போதிலும் தனது மகனை பொலிஸார் இன்று வரை வெளிப்படுத்தவில்லை என குற்றம் சாட்டியுள்ளதுடன்காணாமல்போயுள்ள தனது மகனை கண்டு பிடித்து தருமாறு ஆணைக்குழுவில்முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம)

## பதில் கடமை...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிற் கடமை தலைவராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் யசந்த கோத்தாகொட, உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படவுள்ளார்.

இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு புதிய நீதியரசரை நியமித்து தலைவர் ஒருவரை நியமிக்கும்வரை நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ், பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## முன்னாள்...

எல்.ரீ.பி தெஹிதெனிய, முர்த்து பெர்ணான்டோ மற்றும் பிரீதி பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த மனுக்கள் தொடர்பில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ஆகியவர்கள் சார்பில் தொடர்ந்தும் சட்டமா அதிபர் ஆஜராக போவதில்லை என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரசாங்க மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பர்சானா ஜமில் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அவர்கள் சார்பில் தனிப்பட்ட நீதிபதிகள் இருவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

அத்துடன் குறித்த மனுக்கள் தொடர்பில் ஆட்சேபனைகளை தெரிவிக்க மார்ச் 6 ஆம் திகதி வரையில் உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது. (ம)

## வளவில் ஆடு...

இதில் அதே இடத்தினை சேர்ந்த ஈஸ்வரி (வயது 53) எனடபவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## மோ.சைக்கிள்...

டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டு அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலஸார் தெரிவித்தனர். (ம-60)

### எதிர்வரும் பொதுத் தேர்தலில்

# பெரும்பான்மை பெறுவதில் எந்த சிரமமும் இருக்காது

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர் மக்கள் அணிதிரண்டுள்ளதாகவும் இதனால், எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவது சிரமமானதாக இருக்காது எனவும் கல்வி சேவைகள் ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டிய ஜயதிலக்க மைதானத்தில் நேற்று நடைபெற்ற விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் சில அணிகள் நாட்டு மக்களுக்கு சிறிய பரிசுகள், உண்டியல்களை கொடுக்க முயற்சித்தனர். அவற்றை நிராகரித்த நாட்டு மக்கள் கோட்டாபய ராஜபக்சவை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்தனர்.

மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் மிகவும் கவனமாக வும் முன்னுதாரணமாகவும் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் வலுவான பாராளுமன்றத்தை அமைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டை வெற்றி பெற செய்ய முன்னெடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் பங்காளியாக மாற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்பார்த்துள்ளது எனவும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (ம)

# அரசின் நடவடிக்கைக்கு எதிராக போராடவேண்டும்

### அகிலவிராஜ் காரியவசம் அழைப்பு

(கொழும்பு)

19வது திருத்த சட்டத்தை அரசாங்கம் ரத்து செய்ய முயலும் நடவடிக்கைக்கு எதிராக அனைத்து முற்போக்கு சக்திகளும் இணைந்து போராட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் 19 இன் ஊடாகவே சுதந்திரத்தை பெற்று தந்தது. எனினும் அதனை புதைத்து விட அரசாங்கம் முயல்வதாக அகில விராஜ் காரியவசம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (ம)

## மேல் மாகாணத்தில் சுற்றி...

இந்த சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் மேல் மாகாணத்திலுள்ள 110 பொலிஸ் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 98 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 128 பேரும், போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 324 பேரும் காணப்படுவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகத்திற்கிடமான 205 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சுற்றிவளைப்புக்கு 1200 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ம)

## படுகொலையான உறவுகளின்...

2000ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியிலுள்ள படித்த மகளிர் குடியேற்றத்திட்ட பகுதியில் வைத்து 5 வயது சிறுவன் உட்பட 8 பேர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இக் கொலைக் குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக கருதப்பட்ட இராணுவ அதிகாரியான சுனில் ரத்நாயக்கவுக்கு 2017ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந் நிலையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வருடம் 10.01.2020 ஆம் திகதி வெள்ளிக் கிழமை போயா தினத்தன்று பொது மன்னிப்பு வழங்கினார் என ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டோம்.

ஆகவே பொது மன்னிப்பு வழங்கிய இராணுவ அதிகாரியால் கொலை செய்யப்பட்ட குடும்பங்களின் ஏனைய உறவினர்களுக்கும் குறித்த கொலைச் சம்பவத்துக்காக சாட்சிகள் தெரிவித்தவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகிறது.

ஆகவே குறித்த விடயங்கள் தொடர்பில் யாழ் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு செய்து எமது உறவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு முறைப்பாடு வழங்கினார். (ம-9,10)

# மணல் அகழ்வு நடைபெறும் இடங்களில் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் அகழ்வு நடைபெறுகின்ற இடங்களில் பொலிஸ் காவலரண்களை அமைப்பது என முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று பிற்பகலில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் அதிகாரிகள், கனியவளத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இறுதியாக கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மணல் பிரச்சினை முதன்மைப் பிரச்சினையாக மாறியதுடன் மணல் அகழ்வினைத் தடுக்க முயல்கின்ற அதிகாரிகளுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில் மாவட்டச் செயலகத்தில் மணல் அகழ்வு தொடர்பாக முப்படையினரையும் இணைத்து கூட்டம் நடத்துவது என எடுக்கப் பட்ட தீர்மானத்திற்கமைய நேற்று பிற்பகலில் மாவட்டச் செயலகத்தில் மணல் அகழ்வு தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

மணல் அகழ்வு இடம்பெற்று வாகனங்கள் வீதிக்கு வந்தால் கைது செய்ய முடியாது என பொலிஸார் தெரிவித்த நிலையில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் வழங்குகின்ற தகவலின் அடிப்படையில் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளில் பொலிஸார் கடமைகளில் ஈடுபட்டு மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களை கைது செய்வது எனவும் அத்துடன் முக்கிய இடங்களில் பொலிஸ் காவலரண் அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டதுடன் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று இராணுவத்தினரையும் மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-350)

# பங்குச்சந்தை பிரதானிகளுடன் பிரதமர் மகிந்த சந்திப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை கொழும்பு பங்குச்சந்தை நிறுவன பிரதானிகள் நேற்று அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போதே கடந்த நான்கரை வருட காலமாக கொழும்பு பங்குச்சந்தை சடுதியாக வீழ்ச்சியடைந்தமையினால் பங்குச்சந்தை நிறுவனங்கள் மூடப்பட்டன.

இதன் காரணமாக பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்து பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள் என பங்குச் சந்தை நிறுவன பிரதானிகள் பிரதமரிடம் எடுத்துரைத்தார்கள்.

பல்வேறு புதிய சட்ட நெறிப்படுத்தலினால் பங்குச்சந்தைகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்பு பங்குச்சந்தை பிரதானிகள் சங்கத்தினர் இதன்போது பிரதமருக்கு தெளிவுபடுத்தினர்.

மகிந்த ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் பொருளாதாரத்தை துரிதமாக முன்னேற்றுவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காக காணப்படுகின்றது. வீழ்ச்சியடைந்துள்ள கொழும்பு பங்குச்சந்தையினை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

### சம்பள அதிகரிப்பு

# தோட்ட நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சு

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பில், தோட்ட நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் 23 பெருந்தோட்ட நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உடனடியாக ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாத நிலை நிலவுவதாக பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

ஜக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தில் கடந்த நான்கரை வருட கால நிர்வாகத்தில் தேசிய பொருளாதாரம் 15 வருடத்திற்கு முற்பட்ட காலத்தை போன்று பின் தங்கிய நிலையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக பிரதமர்

# அரசியலமைப்பு பேரவை 23ஆம் திகதி கூடுகின்றது

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவை அதன் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள செயலகத்தில் கூடவுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 19வது திருத்தச் சட்டத்தின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு ஆகிய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் அரசியலமைப்பு பேரவைக்கே வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சபாநாயகர் பதவி வகிப்பதுடன் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 10 பேர் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். (ம)


தேவை

1.விற்பனையாளர் – யாழ்.நகரில் உள்ள ஆர்.வி.ஜி மெடிக்கலுக்கு சிறுவர்களுக்கான ஆடைகள், அழகு சாதனப் பொருட்கள், பலசரக்குப் பொருட்கள் விற்பனையில் அனுபவம் உள்ள A/L சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2.விற்பனையாளர் – நல்லூர் குறுக்குத்தெருவில் அமைந்திருக்கும் ஆர்.வி.ஜி. கம்பனிக்கு விற்பனையாளர் தேவை. **வயதெல்லை 30-35 இற்கு இடைப்பட்டவராகவும் க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் பாடத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர் விரும்பத்தக்கது.**

3.தோட்ட பராமரிப்பாளர் – நீர்வேலி கரந்தன் பகுதியில் உள்ள விவசாயப் பண்ணைக்கு அனுபவமிக்கவர் தேவை. குடும்பமாக தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி (1935)

**வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ் (RVG Company)**

இல.58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (1937)



**வேலைவாய்ப்பு**

2020ஆம் ஆண்டுக்கான புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் 6 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பின்வருமாறு

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்
- திருகோணமலை

மற்றும் தங்களின் கல்வித்தராதரம், விசேட திறமைகளுக்கேற்ப ஊதியம், மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் கொடுக்கப்படும். இதற்கு எதிர்பார்க்கப்படுவது யாதெனில் 18-35 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு: 0775179034, 0779858580
(Call time 9.00 am - 4.30 Pm) (1940) 021 722 3317


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.